இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

**Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876**

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 142 இதழ் : 18 திகதி: 30.09.2018 விலை : 20.00

# உலகெங்கும் சிதறி வாழும் தமது பிள்ளைகளை ஒரே குடும்பமாக இணைப்பவர் மரியன்னை

## கனடா ரொரன்ரோ ஆரோக்கிய அன்னை திருவிழாவில் யாழ் குருமுதல்வர்



கனடாவின் ரொரன்ரோ மாநிலத்தில் புலம்பெயர்ந்து வாழும் இறைமக்களின் பாதுகாவலியான புனித ஆரோக்கிய அன்னை திருவிழாத் திருப்பலியைத் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்த யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரொரன்ரோ மாநிலத்தின் ஆன்மீக இயக்குனர் அருட்திரு சார்ள்ஸ் கொலின்ஸ் அடிகளாரால் ஒழுங்கு செய்யப்பட்ட மரியன்னை விழா முன்று நாட்கள் ஆயத்த வழிபாடுகளோடு கடந்த செப்ரம்பர் 9ம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

குருமுதல்வர் அவர்கள் தனது மறையுரையில் எமது மக்கள் பல்வேறு காரணங்களுக்காக தமது சொந்த நாட்டைவிட்டு உலகின் பல்வேறு நாடுகளில் சிதறி வாழ்ந்தாலும் மரியன்னையின் பக்தர்கள் என்றவகையில் ஒரு குடும்பமாகவே வாழ்கிறார்கள் என்பதை தான் பல நாடுகளுக்கு மேற்கொண்ட ஆன்மீகப் பயணங்களின்போது கவனித்ததாகத் தெரிவித்தார்.

ஜேர்மனியின் கேவலார் திருத்தலம், மற்றும் லண்டன் வோல்சிங்கம் திருத்தலம் போன்ற மரியன்னையின் திருத்தலங்களிலும் ஆயிரக்கணக்கில் ஒன்றுகூடிய மரியன்னையின் பக்தர்களையும் நினைவுகூர்ந்த அவர் தனது பிள்ளைகளை ஒரே குடும்பமாகப் பிணைத்து வைத்திருக்கும் பாசமிகு அன்னையாக மரியன்னை திகழ்கிறார் என்றும் எடுத்துரைத்தார்.

எமது மக்கள் எந்த ஒரு புதிய நாட்டுக்கோ அல்லது நகரத்திற்கோ புலம்பெயர்ந்து சென்றவுடன் முதலில் தேடுவது ஒரு ஆலயத்தைத் தான் என்று கூறிய குருமுதல்வர் தமது விசுவாசவாழ்வை தொடர்ந்து ஸ்திரப்படுத்துவதற்கு அவர்கள் கொடுக்கின்ற முன்னுரிமையைப் பாராட்டினார். (தொடர்ச்சி 11ம் பக்கம்)

# புனித யோசப்வாஸின் அற்புதச் சிலுவை யாழ். மறைமாவட்டத்தில் பவனி வருகிறது

## ஒக்டோபர் 18 முதல் 22 வரை

இலங்கையின் திருத்தூதரான புனித யோசப்வாஸ் பயன்படுத்திய அற்புதச் சிலுவை யாழ். மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களுக்கு எடுத்துசெல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களுக்கும் எடுத்துச்செல்லப்படுகின்ற இந்தச் சிலுவை வருகிற ஒக்ரோபர் மாதம் 18ம் திகதி முதல் 22ம் திகதி வரை யாழ். மறைமாவட்டத்திற்கு எடுத்துவரவிருப்பதால் அதனை பல்வேறு பங்குகளுக்கு எடுத்துச் செல்வதற்கான ஒழுங்குகளை யாழ். மறைமாவட்ட புனித யோசப்வாஸ் குழு மேற்கொண்டுள்ளது.

ஐந்து நாட்கள் மட்டும் இச் சிலுவை யாழ் மறைமாவட்டத்தில் இருப்பதால் எல்லாப் பங்குகளுக்கும் இதனை எடுத்துச்செல்லமுடியாதநிலையில் வெவ்வேறு மறைக்கோட்டங்களின் சில குறிப்பட்ட ஆலயங்களில் மட்டும் இச் சிலுவை தரித்துவைக்கப்பட்டு சில இடங்களில் திருப்பலிகளும் சில இடங்களில் ஆராதனைகளும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவைபற்றிய விபரங்களும் நாள், நேர அட்டவணைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, பங்குத் தந்தையர்கள், பாடசாலை அதிபர்கள் தமது பங்குமக்கள், மாணவர்கள் புனித யோசப்வாஸின் அற்புதச் சிலுவையைத் தரிசிப்பதற்கான பொருத்தமான இடங்களைத் தெரிவுசெய்து அவர்கள் புனிதரின் ஆசீரைப் பெற ஏற்பாடு செய்யுமாறு யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஜெபரட்ணம் அடிகளார் கேட்டுள்ளார்.

**விபரங்களை 12ம் பக்கத்தில் காணலாம்.**

# தருமபுரம் புனித பிரான்சிஸ் சவேரியார் புதிய ஆலய அபிஷேகத் திறப்புவிழா





முல்லைத்தீவு மறைக்கோட்டத்தின் தருமபுரம் பங்கில் அமைந்துள்ள புனித பிரான்சிஸ் சவேரியார் புதிய ஆலய அபிஷேக திறப்பு விழாவும் புனிதரின் திருவிழாவும் 16.09.2018 ஞாயிற்றுக் கிழமை பங்கு தந்தை அன்ரனி வின்சன் சில்வெஸ்ரதாஸ் தலைமயில் இடம் பெற்றது .

புதிய ஆலயத்தினை யாழ்பாணம் மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அபிஷேகம் செய்து திறந்து வைத்து, திருவிழா திருப்பலியை நிறைவேற்றி திருச்சுரூப ஆசீர்வாதம் வழங்கினார். புதிய ஆலய அபிஷேக திறப்பு விழாவிலும், திருவிழா திருப்பலியிலும் குருக்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்களென பலரும் கலந்து கொண்டனர்.

## கனடாவில் தமிழ் மக்களைச் சந்திக்கும் யாழ் ஆயர்



கனடாவுக்கு சென்றுள்ள யாழ் மறைமாவட்ட ஆயர் அதிவண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள், கனடா ரொரன்ரோ புனித ஆரோக்கிய அன்னை தமிழ் கத்தோலிக்க பங்கு மக்களைச் சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை, ஒக்ரோபர் 7ம் திகதி மாலை 4.30 மணிக்கு பங்கு மக்களுடன் (திருப்பலி ஒப்புக்கொடுக்கும் ஆயர் அவர்கள், திருப்பலியின் நிறைவில் பங்குமக்களைச் சந்தித்து உரையாடவுள்ளார்.

## யாழ். மறைமாவட்டத்தில் மறைக்கல்வி வார நிகழ்வுகள்

யாழ் மறைமாவட்டத்தில் 09.09.2018 தொடக்கம் 16.09.2018 வரையான காலப்பகுதியில் பங்குமட்ட மறைக்கல்வியை ஊக்குவிக்கும் முகமாக மறைக்கல்வி வாரம் அனுசரிக்கப்பட்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பங்குகள் தோறும் இவ்வாரத்தை முன்னிட்டு விசேட திருப்பலி நிகழ்வுகள், கருத்தமர்வுகள், நற்கருணை வழிபாடுகள், விசேட போட்டிகள், கலை நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் என்பன சிறப்பாக நடைபெற்று வருவதாக யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்பணி அ.பெ.பெனட் அடிகளார் தெரிவித்துள்ளார்.

## இயந்திர மனித கண்டுபிடிப்பில் யாழ் கத்தோலிக்க மாணவன் சாதனை



நல்லூர் புனித ஆசீர்வதப்பர் ஆலயத்தைச் சேர்ந்த செல்வம் சேர்வின் ஸ்ரீபன் லேனாட் மெக்சிக்கோவில் நடைபெற்ற உலக இயந்திர மனித ஒலிம்பிக் கண்டுபிடிப்பு போட்டியில் இலங்கைக் குழுவில் அங்கத்தவராகத் தெரிவாகி, இறுதிப்போட்டியில் பங்குபற்றி சாதனை படைத்துள்ளார். இவ் இளம் கண்டு பிடிப்பாளரை பாதுகாவலன் குடும்பத்தினர் வாழ்த்தி மகிழ்கின்றனர்.

## யாழ் போதனா வைத்தியசாலை வேளாங்கண்ணி சிற்றாலய திருவிழா

யாழ் போதனா வைத்தியசாலை சிற்றாலயத்தில் 23.09.2018 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு அருட்தந்தை ஜீவேந்திரா போல் அ.ம.தி தலைமையில் திருவிழாத் திருப்பலி வெகு சிறப்பாக நடைபெற்றது.

உடலாலும், உள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களுக்கு குணமாக்கலை வழங்குகின்ற வேளாங்கண்ணி அன்னையின் திருவிழாவினை மத வேறுபாடின்றி அனைத்து மக்களும் வைத்தியசாலை ஆன்மீக செயற்பாட்டுக் குழுமத்துடன் சேர்ந்து வெகு விமரிசையாக கொண்டாடினர்.

திருவிழா திருப்பலியினைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூப பவனியும், திருச்சொரூப ஆசியும் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புதிதாக அன்னதான நிகழ்வும் இடம்பெற்றது. மக்கள் அனைவரும் அன்னையின் ஆசீரைப் பெற்றவர்களாக மன நிறைவுடன் சென்றனர்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்.** (தி.பா:127:1)

# எமது எண்ணம்

## தலைமுறை இடைவெளியின் முரண்பாடுகள்

மனிதகுல வரலாற்றின் பரிணாம வளர்ச்சிக் கட்டத்தில் இன்று மூன்று தலைமுறையினர் முரண்பாடுகளுக்கு மத்தியில் வாழ்க்கை வெளியில் பயணித்து வருவதை நோக்க முடிகின்றது. மனிதவலுவைக் கொண்டு இயங்கிய நம் மூதாதையர் சமூகமும் மின்சார வலுவில் இயங்கிய நடுத்தர சமூகமும். இலத்திரனியல் உலகில் சஞ்சரிக்கும் இளையோர் சமூகமும் என மூன்று தலைமுறைஇடைவெளிஇன்றையகால இயக்கத்தில்அசைந்து கொண்டிருக்கின்றது. இவற்றுக்கிடையில முரண்பாடுகள் தோன்றியுள்ளமை நிதர்சன உண்மை.

மனிதவலுவைக் கொண்டு இயங்கிய நம் முன்னோர் தமது பண்பாடுகள். கலாசாரங்கள் என்பவற்றை பேணுகின்ற சமூகமாக. தமது தொழில் துறைகளில் பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டு தமது உடலை வருத்தி. உழைப்புக்கு முதன்மை அளித்து. இயற்கையை ரசித்து. சூழலைப் பேணி மனித வாழ்வை மாண்புமிகு கட்டுக்கோப்புடன் கொண்டிருந்தனர்.

அத்தகைய தலைமுறையிலிருந்து மறு தலைமுறை மின்சார வலுவில் இயங்கத் தொடங்கியது. மின்சாரத்தைப் போன்று வேகமாக எதனையும் சிந்தித்தும். சிந்திக்காமலும் வேகத்தோடு இயங்கிய ஒரு சமூகமாக இந்நடுத்தர தலைமுறை தன்னை உருவமைத்துக் கொண்டது. சிறிய ஒரு உதாரணம் மூலம் இதனை விளக்கலாம். எங்கள் பாட்டி வடை சுடுவதற்கு ஏறத்தாழ மூன்று மணித்தியாலங்கள் எடுத்தது. உழுந்தை ஊறவைத்து. ஆட்டுக்கல்லில் அரைத்து. குழைத்து. அடுப்பு நெருப்பு மூட்டி. எண்ணெய்ச் சட்டி வைத்துப் வடை பொரித்து எடுக்க கிட்டத்தட்ட மூன்று மணித்தியாலங்கள் பாட்டிக்கு சென்றமை நான் கண்ட உண்மை. ஆனால் இன்று அதே வடை அரை மணித்தியாலத்தில் மின்சார வலுவில் இயங்கும் கிறைண்டர் மற்றும் எரிவாயு அடுப்பு அல்லது மின்சார அடுப்பு துணை கொண்டு தயாரிக்கப்படுகிறது. இலத்திரனியல் யுகத்தில் இதே வடை தயார்செய்யப்பட்ட நிலையில் கடையில் விற்பனை செய்யப்படுகிறது. அதனைக் கொள்வனவு செய்து உடனே பொரித்து உண்ணலாம். இது ஒரு சாதாரண உதாரணம். இதைவிட மலையளவு பல உதாரணங்களை எடுத்துக் காட்டி தலைமுறை இடைவெளியின் தூரத்தை குறிப்பிடலாம்.

இத்தகு தலைமுறை இடைவெளிக்குள் முரண்பாடுகள் பல சங்கமிப்பதே இன்று சங்கடமாக உள்ளது. எமது மூத்தோர் இன்றைய இளைய தலைமுறையின் அதாவது இலத்திரனியல் உலகில் சஞ்சரிக்கும் இளைய தலைமுறையினரின் செயற்பாடுகள் குறித்து தினமும் தமது கண்டனத்தை வெளியிட்டு நச்சரித்தவண்ணம் உள்ளனர். இன்று சாதாரணமாக குடும்பங்களில் நடக்கும் உரையாடல்கள் மூலம் இதனை நாம் தெரிந்துணரலாம். வயது சென்ற அம்மா ஒருவர் தனது மகனிடம் பேரப்பிள்ளைகளின் போக்குகளைச் சுட்டிக்காட்டுகின்றார். "உன்னை நான் இப்படித் தான் வளர்த்தேனா?". "பிள்ளையின் விருப்பத்திற்கு நீ எல்லாவற்றுக்கும் தலையாட்டிக்கொண்டிருந்தால் உன் பிள்ளை நாளைக்கு தறுதலையாகத்தான் திரியும்" இப்படி மூத்தோரின் வாயிலிருந்து பல வசைமாரிகள் பொழியப்படுகின்றன. இவற்றில் உண்மையும் இல்லாமலில்லை. ஆனால். வளர்ந்துவரும் விஞ்ஞான உலகில் பயணிக்கின்ற இளைய தலைமுறையினர் மனிதவலுவோடு செயற்பட்ட தம் மூதாதையரைப் போன்று அல்லது மின்சார வலுவில் செயற்பட்ட தமது நேரடி மூத்தோர் போன்று வாழவேண்டுமென எவரும் எதிர்பார்க்க முடியாது.

விஞ்ஞான வளர்ச்சியின் சிகரமான இலத்திரனியல் துறையானது செக்கனுக்குள் உலகமெங்கும் நிகழ்பவற்றை அறியவும், பார்க்கவும். பகிர்ந்து கொள்ளவும் முடிவது திறமைதான். இத்தகைய அபரிமித வளர்ச்சி இளைய தலைமுறையால் சுவாசிக்கும் காற்றை விட வேகமாக உள்வாங்கப்படுகின்றது. பழைய மரபுகளுக்கு இவர்களை இனிமேல் அழைத்துவர முடியாது.

"என்மகன் ரச் போன் வாங்கிவிட்டான். இனி பிந்திப் படுத்து பிந்தி எழும்புவான்; பாடப் புத்தகங்கள் படிக்க மாட்டான் பேஸ் புக் படிப்பான்; எமக்கெல்லாம் வணக்கம் சொல்லமாட்டான் வைபரில் நண்பர்களுக்கெல்லாம் வணக்கம் சொல்வான்; இன்ப துன்பங்களில் நேரடியாக பங்குகொள்ள மாட்டான் குறுஞ்செய்தியில் அவற்றை தெரிவித்துவிட்டு அமைதியாய் இருப்பான்; பூசைக்குச் செல்லமாட்டான் சனலில் பூசை பார்ப்பான்; மைதானத்தில் ஓடியாடி விளையாடி உடற்பயிற்சி செய்யமாட்டான் போனில் கேம் விளையாடி களித்திருப்பான்". இது ஒரு தந்தையின் ஆதங்கம்.

தலைமுறைகளுக்கிடையில் இடைவெளி நீண்டு. முரண்பாடுகள் வலுத்துக்கொண்டே சென்றால் நல்லதொரு சமூகத்தை கட்டியெழுப்புவது கடினம். மூன்று தலைமுறையினரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு புரிந்துணர்வுகளின் அடிப்படையில் தமக்கிடையே உறவுப்பாலத்தை வலுப்படுத்த வேண்டும். இதைவிடுத்து ஒருவர் மற்றவரை குறைசொல்லி. குற்றங்கண்டு வாழ தலைப்படின் குற்றம் குறையுள்ள சமூகம் தான் காலத்தில் பிரசவிக்கப்படும். அறிவுரைகள் செவிமடுக்கப்படவேண்டியவை. அனுபவங்கள் பின்பற்றப்படவேண்டியவை. இளைய தலை முறையின் பயணம் திட்டமிடப்படவேண்டியவை. மூன்று தலைமுறையினரும் கைகோர்த்து பயணிக்கவேண்டியது காலத்தின் தேவையாகும்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# பால்டிக் நாடுகளுக்கு திருத்தந்தை நன்றி

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். லித்துவேனியா. லாத்வியா. எஸ்டோனியா ஆகிய மூன்று பால்டிக் நாடுகளுக்கு மேற்கொண்ட நான்கு நாள் திருத்தூதுப் பயணத்தை செப்ரெம்பர் 25. நிறைவுசெய்து. அன்று இரவு 8.20 மணியளவில் உரோம் சம்ப்பினோ விமான நிலையம் வந்திறங்கினார். செப்ரெம்பர் 26 காலையில் வழங்கிய தனது வழக்கமான புதன் பொது மறைக்கல்வியுரையில் இத்திருத்தூதுப் பயணம் பற்றிய தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உரோம் நகரில் காலையில் குளிர் காற்றும் அதேநேரம சூரியனின் வெண்கதிர்களும் பளிச்சென வீசிக்கொண்டிருக்க இம்மறைக்கல்வியுரை வத்திக்கான் தூய பேதுரு சதுக்கத்தில் இடம்பெற்றது.

**திருத்தந்தையின் மறைக்கல்வியுரை**

அன்புசகோதரர். சகோதரிகளே! லித்துவேனியா, லாத்வியா, எஸ்டோனியா ஆகிய மூன்று பால்டிக் நாடுகள் சுதந்திரம் அடைந்ததன் நூறாம் ஆண்டையொட்டி அந்நாடுகளுக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொண்டு திரும்பியுள்ளேன். இம்மூன்று நாடுகளும் முதலில் நாத்சி பின்னர் சோவியத் ஆகியவற்றின் ஆக்ரமிப்பின் நுகத்தடியின்கீழ் துன்புற்றுள்ளன. இம்மக்கள் கடுமையாய் துன்புற்றதால் ஆண்டவரும் அவர்களை கனிவுடன் நோக்கியுள்ளார். எனக்கு இனிய வரவேற்பளித்த இம்மூன்று நாடுகளின் அரசுத்தலைவர்கள் மற்றும் அரசு அதிகாரிகளுக்குநன்றி. இந்தத்திருஅவைநிகழ்வு தயாரிப்புகளில் ஒத்துழைத்த ஆயர்களுக்கும் நன்றி. நற்செய்தியின் மகிழ்வையும் இரக்கம் மற்றும் கனிவின் புரட்சியையும் மீண்டும் அறிவிக்கும் நோக்கத்தை இந்தப் பயணம் கொண்டிருந்தது. ஏனெனில் கடவுளன்பும், பிறரன்பும் இன்றி சுதந்திரம் மட்டும் வாழ்வுக்கு முழு அர்த்தத்தை தர இயலாது. நற்செய்தி நம் துன்பவேளைகளில் உறுதிப்படுத்தி விடுதலைக்கான போராட்டத்தைத் தாங்கிப் பிடிக்கின்றது. சுதந்திரத்தின் நேரங்களில் அது உப்பாக இருந்து ஒவ்வொரு நாள் வாழ்வில் மணத்தை அளித்து புறக்கணிப்பு மற்றும் தன்முனைப்பிலிருந்து தடுக்கின்றது. வில்நியூஸ் நகரில் இளையோரைச் சந்தித்தவேளையில் இயேசு கிறிஸ்துவே நம் நம்பிக்கை என்பதை நன்றாக உணர முடிந்தது. ரீகா நகரில் வயது முதிர்ந்தோரைச் சந்தித்தபோது நம்மைத் தாங்கிப் பிடிக்கும் பொறுமை மற்றும் நம்பிக்கைக்கு இடையேயுள்ள தொடர்பை வலியுறுத்தினேன். இந்த நம்பிக்கையே, அருள்பணியாளர்கள். இருபால் துறவியர். மற்றும் குருத்துவ மாணவர்களை உறுதிப்படுத்தி. பல மறைசாட்சிகள் கடவுளுக்குச் சாட்சியம் பகரச் செய்துள்ளது. காலங்கள் கடந்துள்ளன பல்வேறு சர்வாதிகார அரசுகள் வந்துபோயுள்ளன. இவ்வேளையில் வில்நியூசில், விடியலின் வாயிலுக்கு மேலே இரக்கத்தின் அன்னை மரியா. உறுதியான நம்பிக்கை மற்றும் ஆறுதலின் அடையாளமாக தம் மக்களைத் தொடர்ந்து பாதுகாத்து வருகிறார். கவுனாஸ். அக்லோனா. தாலின் ஆகிய மூன்று நகரங்களில் நிறைவேற்றப்பட்ட திருப்பலி கொண்டாட்டங்களில் விசுவாசிகள் நம் நம்பிக்கையாகிய கிறிஸ்துவுக்கு ஆகட்டும் என்பதை புதுப்பித்தனர். ஏனெனில் இந்த விசுவாசிகளின் இதயங்களில இறைவன் திருமுழுக்கின் அருளை உயிர்த் துடிப்புள்ளதாக மாற்றியுள்ளார்.

இவ்வாறு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது பால்டிக். நாடுகளின் திருத்தூதுப் பயணம் பற்றி உரையாற்றிய பின்னர இந்த மறைக்கல்வியுரையில் கலந்துகொண்ட பல நாடுகளின் திருப்பயணிகளை வாழ்த்தினார். மேலும் சீன மக்கள் எல்லாருக்கும். அமைதி எனும் கொடையை இறைவன் வழங்குமாறு செபிப்போம் என்று அனைவரையும் கேட்டுக் கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ். சீனாவில் ஆயர்கள் நியமனம் குறித்து சீன மக்கள் குடியரசுக்கும் திருப்பீடத்திற்கும் இடையே செப்டம்பர் 22 சனிக்கிழமையன்று கையெழுத்திடப்பட்டுள்ள ஓர் இடைக்கால ஒப்பந்தம் கடந்தகால காயங்களைக் குணப்படுத்தவும். சீன கத்தோலிக்கரின் முழு ஒன்றிப்பை ஊக்குவிக்கவும் உதவுவதற்குச் செபியுங்கள் என்றும் திருத்தந்தை கூறினார். பின்னர் அனைவருக்கும் தன் அப்போஸ்தலிக்க ஆசிரையும் அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# விமானப்பயணத்தில் திருத்தந்தை வழங்கிய நேர்காணல்



செய்தியாளர்களுக்கு திருத்தந்தை வழங்கிய நேர்காணலில், திருப்பீட - சீன உறவு போர்க்கருவிகளை அழிப்பது ஆகியவை முக்கியக் கருத்துக்களாகப் பேசப்பட்டன

பால்டிக் நாடுகளில் திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொண்ட திருத்தூதுப் பயணத்தின் இறுதியில் உரோம் நகர் திரும்பும் வேளையில் செய்தியாளர்களுக்கு வழங்கிய நேர்காணலில் திருப்பீடசீன உறவு . போர்க்கருவிகளை அழிப்பது ஆகியவை முக்கியக் கருத்துக்களாகப் பேசப்பட்டன. செய்தியாளர்களின் கேள்விகள் முதலில் திருத்தூதுப் பயணத்தைக் குறித்து அமைவது நல்லதென்று கூறியத் திருத்தந்தை. தான் பயணம் மேற்கொண்ட மூன்று நாடுகளும். அந்நிய ஆக்ரமிப்புக்களைக் கண்டாலும். அவை தங்கள் தனித்துவத்தைக் காப்பாற்றி வந்துள்ளதைக் கண்டு தான் வியந்ததாகக் குறிப்பிட்டார்.

வில்நியூஸ் நகரில் சித்திரவதைக் கூடங்களை காணச் சென்றதை குறிப்பாக எடுத்துரைத்தத் திருத்தந்தை. இன்றும். சித்திரவதைகள் பல்வேறு வடிவங்களில் தொடர்வதைக் குறித்து ஆழ்ந்த வேதனையை வெளியிட்டதோடு போர் கருவிகளும். சித்திரவதைக் கருவிகளும் வர்த்தகமாக மாறியுள்ளதை. வன்மையாகக் கண்டனம் செய்தார்.

திருப்பீடத்திற்கும் சீன அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம். பல ஆண்டுகளாக சீன அரசின் சிறைகளில் வாடிய ஆயர்களுக்கும். கத்தோலிக்கருக்கும் பெரும் ஏமாற்றத்தை உருவாக்கியுள்ளது என்ற கருத்தில் கேள்வி எழுப்பப்பட்டபோது. அதற்குப் பதில் அளித்த திருத்தந்தை. துன்புற்றோரின் வேதனைகளை தான் உணர்ந்துள்ளதாகவும். கத்தோலிக்க திரு அவை சீனாவில் வளர்வதற்கு ஏற்ற ஒரு சமரச முயற்சியாக உருவாகியுள்ள இந்த ஒப்பந்தத்திற்கு. தான் முழு பொறுப்பு ஏற்பதாகவும். இதனால் ஏமாற்றமும். வேதனையும் அடைந்துள்ளோர். இதன் நல்விளைவுகளைக் காண்பர் என்று தான் நம்புவதாகவும் கூறினார்.

சீன அரசுக்கும். திருப்பீடத்திற்கும் இடையே நல்லுறவுகளை உருவாக்க மேற்கொண்ட முயற்சிகள் இரு அடி முன்னேறினால். ஓரடி பின்னோக்கி திரும்பியுள்ளது என்ற உருவகத்தைப் பயன்படுத்தி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த முயற்சிகளை விவரித்தார். எந்த ஓர் ஒப்பந்தமும் துன்பங்களைக் கொணர வாய்ப்பு உண்டு என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக. ஒரு சிலரது குரல்கள் எழுந்துவரும் அதே வேளையில் பல சீன ஆயர்கள். அருட்பணியாளர்கள். துறவியர் மற்றும் பொது நிலையினர் இந்த ஒப்பந்தத்தை மதித்து. ஆதரித்து. தங்கள் கருத்துக்களைக் கூறியுள்ளனர் என்று எடுத்துரைத்தார்.

# சிறுவர்கள் நாளைய சமூகத்தின் தூண்கள்



அருட்பணி ஜீவனதாஸ் பெர்னாண்டோ(அமதி)

நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி
ஒரு சரித்திரம் இருக்குது தம்பி
அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம்
தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம்
இரண்டும் இருந்தால் பேரை வாங்கலாம்
பேரை வாங்கினால் ஊரை வாங்கலாம்

என்பது கவிஞர் கண்ணதாசனின் கவிதை வரிகள்

நாளைய சமூகத்தினை நடாத்தப் போகிறவர்கள் இன்றைய சிறுவர்கள். இந்தச் சிறுவர் பராயம் மனித வாழ்வில் மிக முக்கிய பகுதியாகக் கருதப்டுகின்றது. சமூகத்திடம் இருந்து குறிப்பாக பெற்றோரிடமிருந்து அன்பையும், பாதுகாப்பினையும் எதிர்பார்க்கின்ற பராயமாக இது அமைந்திருக்கிறது. சிறுவர் தாம் கண்டதை, கேட்டதை, பார்ப்பதை மனதில் கொண்டு அறிவுத் தேடலுக்குள் நுழைகின்றனர். இந்த அறிவுத் தேடலில் முதல் ஆசான் அவனுடைய பெற்றோர் ஆகும். அதன் பின் சமூகத்திடம் இருந்து தன்னுடைய ஆளுமை வளர்ச்சிக்கான பண்புகளைப் பெற்றுக் கொள்கின்றார். அதுவே சிறுவர்களது அறிவுத் தேடலுக்கான நல்வழியை காட்டுவது நம் கடமை.

**பெற்றோரின் அன்பு**

தாயின் வயிற்றில் உருவாகியது முதல் தாயின் ஒவ்வொரு நல்ல பண்புகள் மூலமாக அன்பு வெளிப்படுத்தப்படுகின்றது. தாய் சலிப்படையக் கூடாது தாய் கோபப்படக்கூடாது. குழந்தை பிறந்த பின்பு அன்பு செயலில் காட்டப்பட வேண்டும். தொடுதல், கொஞ்சுதல், அரவணைத்தல் போன்றவை மூலமாக அன்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

**பெற்றோரின் பாதுகாப்பு**

புதிய உலகத்தில் நுழைந்துள்ள குழந்தைக்கு தாயின் பாதுகாப்பு எப்போதும் மிக அவசியம். விழுந்து விடுவேன் என்ற பயம், உணவுக்காக அழுதல் போன்றன பாதுகாப்பின் மூலம் பூர்த்தியாக்கப்படுகின்றது.

**ஐம்புல விழிப்புகளில் கவனம்**

இது குழந்தையின் சிந்தனை விருத்தியின் ஆரம்பப் பருவமாகும். குழந்தையின் மனதில் ஏற்படுகின்ற சந்தேகங்கள் நிவர்த்தி செய்யப்படல் வேண்டும். விழித்தெழுந்து சிந்திக்க தேவையானதை கவனித்துக் கொள்ளல் வேண்டும். அறிவுத் தூண்டலுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல் வேண்டும்.

குழந்தையை சுற்றியுள்ள இயற்கை, வீட்டு மக்கள், வெளியிலிருந்து வருகின்றவர்கள் அனைவரும் குழந்தையை ஆதரித்து உற்சாகப்படுத்த வேண்டும்.

குழந்தைகளை குழந்தைகளுடன் பேச விடுங்கள். குழந்தைகளின் உலகத்தினை ஒரு குழந்தையால் தான் புரிந்துகொள்ள முடியும். இப்படி மழலைகள் ஒன்று சேரும் போது ஆளுமை வளர்ச்சி ஏற்படும்.

**வேதாகமத்திலிருந்து சில துளிகள்**

கிறிஸ்து இயேசு தன்னை நோக்கி வந்த அனைத்து சிறுவர்களையும் அரவணைத்து தன் கை-களை அவர்கள் மீது வைத்து ஆசீர்வதிக்கின்றார். "சிறுபிள்ளையை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் விண்ணகம் இத்தகையோருக்கே உரியது."

(லூக்.19:13-15)

"இறையாட்சியை சிறுபிள்ளையைப் போல் ஏற்றுக் கொள்ளாதோர் அதற்கு உட்பட மாட்டார்கள் என உறுதியாக சொல்லுகிறேன்". (லூக்.18: 19) இவ்வாறு சிறுவர்கள் தொடர்பாக கூறிய கிறிஸ்து இயேசு சிறுவர்களுக்கு இடறல் உண்டாக்குகிறவனின் கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி கடலில் தள்ளுவது அவனுக்கு நலமாயிருக்கும் எனவும் கூறி, சிறுவர் மாண்பினையும் சிறுவர் மாண்பை நாம் எல்லோரும் மதித்து போற்றிப் பாதுகாக்கவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றார்.

**சிந்திக்க ஒரு சிறுகதை**

ஒரு இளம் பையன் களவு எடுத்து ஏமாற்றிய குற்றத்திற்கு நீதி மன்றத்தில் நீதிபதி முன்னால் நிறுத்தப் பட்டான். பையனின் தந்தையை நீதி பதிக்கு நன்றாகத் தெரியும். சட்டப் புத்தகத்தை எழுதியவர் அவரே. நீதிபதி பையனைப் பார்த்து "மகனே உன் தகப்பன் பெரிய மனிதன். இப்படியான செய்கை மூலமாக நீ அவரை அவ-மானப் படுத்தலாமா? என்று கேட்டார். பையன் நீதிபதியைப் பார்த்து "ஐயா நான் பலதடவை என் அப்பாவிடம் என் சந்தேகத்திற்கு, என் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடியபோது வெளியே போ, நான் அவசர வேலையாக இருக்கிறேன் என்று என்னைத் துரத்திவிடுவார்". மீண்டும் அந்தப் பையன் நீதிபதியைப் பார்த்து "அப்பா புகழ்பெற்ற சட்டப்புத்தகத்தை எழுதி முடித்துவிட்டார். ஆனால் நான் சட்டத்திற்கு முன்னால் நிற்கின்றேன்" என்று கூறினான்.

நன்றி: துளிகளின் சங்கமம் ■

---

# உன் கண்களால் நான் பார்க்கும் போது....



அருட்பணி.மா.றேஜிஸ் இராசநாயகம்

**முகவுரை**

அன்பு மனித வாழ்வுக்கு அடிப்படையானது. அது அவனது மையத்தை தொடுவது, அவனது ஆளுமையை முழுமையாக ஈடுபடுத்துவது. அன்பை மனிதன் அனுபவரீதியாக உணர்ந்தறிய முடியும் ஆனால் அறிவியல் பூர்வமாக அதனை ஆய்ந்தறிவது கடினம்.

கவிஞர்களது கவிதைப்புலமையில் அன்பு என்பது தன்னைப்போல், ஏன் சிலவேளைகளில் தன்னை விட அதிகமாக, இன்னொருவரை வாழவைக்க, வளர வைக்க, மகிழ்விக்க, நிறைவாக்க ஒருவர் விரும்பி செயற்படுவது. இதனை ஓர் உளவியலாளர் "தன் நிறைவையும் பாதுகாப்பையும் போல் இன்னொருவரின் நிறைவும் பாதுகாப்பும் ஒருவருக்கு முக்கியமாகும் போது அன்பு நிலவுகிறது" என்று கூறுகின்றார்.

*இரு விழிகளின் ஒரே பார்வை*

இவ்வாறு, அன்பு வெறும் உணர்ச்சியோ, இன்னொருவர் மீதான கவர்ச்சியோ அன்று. அன்பு என்பது ஓர் உறவு. ஒருவர் இன்னொருவர் மீது கொள்ளும் உயிராழ்ந்த ஈடுபாடு. இத்தகைய அன்பின் மிக நெருக்கமான வகையே வடிவமே திருமண அன்பு. இரு விழிகளின் ஒரே பார்வை.இரு இதயங்களின் ஒரே பாடல், இரு வாழ்வுகளின் ஒரே பாதை என்பதே கணவன் - மனைவி உறவு.

*காதலை கடந்து கரைவது...*

காதலே திருமண அன்பு எனும் கருத்து சற்றுப் பரவலாக உள்ளது. இவ்வாறு எண்ணுவோருள் பெரும்பாலானோர் இளமைப்பருவத்தினர். இந்த தவறான கணிப்புக்கு முக்கிய காரணங்கள் பல. இளமைப்பருவத்திற்கு இயல்பான கனவுகளும் கற்பனைகளும் உணர்ச்சி வேகமும், உலக நடப்பும், அறியாத்தன்மையும் இவற்றுள் சில. மேலும் இன்றைய நாடகங்களும் திரைப்படங்களும் கூட இதற்கு ஒரு முக்கிய காரணமே. ஆனால் திருமண அன்போ உள்ளார்ந்தது. காதல் பெரும்பாலும் ஒரு புறக்கவர்ச்சியாக விளங்கலாம். ஆனால் கணவன் - மனைவி அன்பு என்பது உடல் - உள்ளம் - உணர்வு - அறிவு - செயல் என முழு ஆளுமையையும் முற்றாக ஈடுபடுத்துவது.

**தோழமை தரும் திருமண உறவு**

ஏனைய அனைத்து நட்புறவுகளை விட கணவன் - மனைவியினது தோழமை ஆழமும் அதிக நெருக்கமும் உடையதாக இருப்பதுண்டு, இருக்கவும் வேண்டும். நட்புகளிலெல்லாம் மிக நெருக்கமாக, ஏனைய எந்தத் தோழமையை விட அதிக ஆழமானதாக திருமண உறவு மலரும் போது தான் அது நிறைவான வளர்ச்சியடைகிறது. நிகரற்ற இன்பம் பயக்கிறது.

**திருமண அன்புக்கு இயல்பான சில பண்புகள்**

திருமண அன்பின் அடிப்படை தன்மைகளை அதன் இன்றியமையாத இயல்பு பண்புகளை நாம் தெரிந்து கொள்வது அவசியம். இத்தகைய முக்கியத்துவம் பெறும் அன்பு நான்காகும். அவை: முழுமை, இணையன்புடைமை, ஒருமை, நிரந்தரத்தன்மை என்பனவாகும்.

முழுமை என்பது திருமண அன்பின் அடிப்படையான ஒரு பண்பியல்பு. கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் முழுமையான அன்பில் ஏற்றுக்கொள்கின்றனர். ஒருவருக்கொருவர் முழுமையான தன்னர்ப்பணம் செய்கின்றனர். இரண்டு ஆள்களின் முழுமையான இணைப்பு அது. இருவரது வாழ்வுகளும் முழுமையாக இணைகின்றன. வாழ்வு முழுவதும் இந்த இணைப்பு தொடர்கிறது.

திருமண அன்பு இத்தகைய முழுமையான தற்கையளிப்பு என்பதால் இருவரும் ஒருவருக்கொருவர் உரியவராகின்றனர். ஒருவரில் மற்றவர் ஒரு பாதி என இருவரும் ஒன்றிக்கின்றனர். "நீயின்றி நான் நானாக இல்லை; நீயின்றி என் வாழ்வு நிறைவு இல்லை" எனும் உணர்வு.

முழுமை என்பது திருமண அன்பின் மூலப்பண்பிலிருந்து பிறப்பது அதன் இன்னொரு பண்பாகிய ஒருமை என்பது. ஒரு தாய்க்கு பல பிள்ளைகள் இருக்கலாம். தாய்ப்பாசத்திற்கு இது தடையில்லை. ஒருவன் அல்லது ஒருத்திக்கு பல நண்பர்கள் இருக்கலாம். நட்பிற்கு இது ஊறாக அமைவதில்லை. ஆனால் ஒரு கணவருக்கு ஒரு மனைவி என்பதே இயற்கை நியதி.

நிரந்தரம் என்பது திருமண அன்பிற்கு உரிய இன்னோர் இயல்புப் பண்பு. சாவினைத் தவிர வேறு எதுவும் அதனை முறிக்கலாகாது. முறியாத, முடியாத அன்பே கணவனும் - மனைவியும் முழுமையாகத் தங்களை ஒருவருக்கொருவர் தரும் திருமண அன்பு.

**உன் கண்களால் நான் பார்க்கும் போது..**

திருமண அன்பு ஒருவரை ஒருவரால் நிறைவுபடுத்துவது. ஆண்மையும் பெண்மையும் உடளவிலும் உள்ளத்தளவிலும், பண்புகளிலும் திறமைகளிலும் ஒன்றின் குறையை ஒன்று நிறைவாக்குபவை. ஒருவரையொருவர் முழுமையாக்கும் இந்த அன்பு கணவரும் மனைவியும் தங்களது உள்ளத்திலும் உணர்வுகளிலும், அனுபவங்களிலும் ஆளுமையிலும் வளர்ச்சியடைய காரணமாகின்றன.

உண்மையான திருமண அன்பில் ஒருவர் மற்றவரிடம் மறைந்து கிடக்கும் பல பண்புகளை, திறமைகளை, உணர்வுகளை வெளிக்கொணருவர். இவ்வாறு திருமண அன்பு ஒருவர் ஒரு-வரை உருவாக்குவது மட்டுமன்றி புதிய உறவுகளையும் உருவாக்குகின்றது. திருமண அன்பின் மிகச் சிறந்த கனி மக்கட்பேறு.

**அன்பிற்கு எத்தனை எதிரிகள்**

திருமண அன்பின் வளர்ச்சிக்கு எண்ணற்ற தடைகளுண்டு.இவற்றுள் முக்கியமானவை சுயநலம், குறைகூறுதல், உரையாடலின்மை, அதிகாரப் போக்கு - மிகைப்பணிவு, தன்மதிப்பு - பிறர் மதிப்பு இன்மை என்பன.

**முடிவுரை**

மனிதனது முதலும் முற்றுறுதிக் குறிக்கோளும் அன்பே. அன்பு இன்றி அவனது வாழ்விற்கு இல்லை அர்த்தம். ஆளுமைக்கு இல்லை அழகு. அன்பே மனிதனது உள்ளியல்பு, உயிர்த்துடிப்பு அதுவே அவனுக்கு வாழ்வு, நிறைவான வளர்ச்சி. தன்னை மையமாக வைத்து வாழும் மனிதன் அன்பால் பிறரை வைத்து வாழும் போது தான் அவன் உண்மையாக வளருகின்றான், உயர்ந்த மனிதனாகின்றான். வாழ்வின் இத்தகைய நிறைவை அடைந்திட இயற்கை அமைத்துத் தந்திருக்கும் மிகச்சிறந்த வாய்ப்பே திருமணம். இதையே இறைவன் ஆசிர்வதித்து அருள் பொழிந்து ஓர் உன்னத அருட் சாதனமாக்கினார். தன்னையே தந்திடும் இந்த அன்பு வாழ்வு எவருக்கும் எளிதானதல்ல. நாளும் மனிதன் பயிலவேண்டியது. ஆழ்ந்த அன்பாக திருமண உறவு மலரும் போது அது போல் நிறைவும் நிகரற்ற இன்பமும் தரும் வேறு அனுபவங்கள் வாழ்வில் கிடைப்பது அரிது.

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறை யாழ். திருமறைக்கலாமன்றத்தின் அனுசரணையுடன் ஒழுங்கமைக்கும்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ கற்கைகள் பற்றிய முதலாவது பன்னாட்டு மாநாடு




மையக்கருத்து: "புதியதோர் கிறிஸ்தவ மனிதநேயப் பண்பாட்டை நோக்கி"
காலம் : 2018, மார்கழி 07,08

**நோக்கம்**

கிறிஸ்தவக் கற்கைகள் பற்றிய இம்மாநாடானது ஓர் அறிவியல் ஆய்வரங்காக அமைகின்றது. கிறிஸ்தவம் இவ்வுலகிற்கு ஒரு மனிதநேயம் நிறைந்த பண்பாட்டினை அறிமுகஞ்செய்தது. கிறிஸ்தவர்கள், குறிப்பாக கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள் உலகெங்கும் சென்று மனிதநேயம் நிறைந்த புதிய வாழ்க்கை முறையைப் பரப்பினார்கள். விஞ்ஞான பூர்வமாக, அறிவியல் முறையியல்களின் அடிப்படையில், தனது சூழமைவுகளின் பின்புலத்தில் கிறிஸ்தவம் மனித நேயப் பண்பாட்டை உருவாக்க எடுத்த முயற்சிகளை ஆவணப்படுத்த இவ்வாய்வரங்கு முனைகிறது. மேலும் கிறிஸ்தவமானது தனது சமூக, மனிதநேயப் பொறுப்பை காத்திரமான முறையில் நிறைவேற்றி இவ்வுலகின் தொடர்ச்சியான தீமைகளான வறுமை, அநீதி, சுரண்டல்கள் என்பவற்றோடு புதியதாக எழுந்த பூகோளமயமாக்கலின் எதிர் வினைகள், ஆபத்துமிக்க சுற்றுச்சூழல் சவால்கள் போன்றவற்றால் பிளவுபட்ட இவ்வுலகில் தனது மனித நேயப்பண்பாட்டை எவ்வாறு புதிய பாதையில் வளர்க்கலாம் என்பதை முன்வைக்கும் களமாகவும் இவ்வாய்வரங்கு அமைகிறது.

மனித நேயப் பண்பாட்டின் உருவாக்கத்திற்காக உழைத்தல் என்பது கிறிஸ்தவர்களின் சமூகப் பொறுப்புணர்வாகும். இம்மாநாடானது எவ்வாறு கிறிஸ்தவம் ஏனைய மதங்களையும் ஒன்றிணைத்து மனித விழுமியங்கள் நிறைந்த ஒரு நற்சமூகத்தைக் கட்டியெழுப்பலாம் என்பது பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்த முனைகிறது. கிறிஸ்தவ ஒன்றிப்பையும் மையப்படுத்தி கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் அனைவரும் தமது சமூகப் பொறுப்பான மனித நேயத்தை மையப்படுத்திய ஒரு பண்பாட்டை நோக்கிப் பயணிக்கவும் அழைப்பு விடுக்கப்படுவதனால் இம்மாநாடு ஒரு கிறிஸ்தவ உரையாடலினதும், ஒன்றிப்பினதும் கல்விப்புலம்சார் முயற்சியாகவும் அமைகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ நாகரிகத்துறை ஓர் அலகாக ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகளும், ஒரு துறையாக வளர்ச்சியடைந்து 30 ஆண்டுகளும் பூர்த்தியடையும் வரலாற்றுச் சிறப்பை நினைவு கூரும் முகமாகவும் இம்மாநாடு ஒழுங்கமைக்கப்படுகிறது.

"புதியதோர் கிறிஸ்தவ மனித நேயப் பண்பாட்டை நோக்கி" என்ற மாநாட்டின் மையக்கருத்தில் ஆய்வாளர்களது சூழமைவின் அடிப்படையில் கிறிஸ்தவக் கற்கைகள் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெறும். உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தமது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க, அவை மீதான விவாதங்கள், விமர்சனங்கள் துறைசார் வல்லுனர்களால் முன்வைக்கப்படும்.

இம் மாநாட்டின் ஏற்பாட்டாளர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறைத்தலைவர் அருட்கலாநிதி J.C. போல் றொகான், திருமறைக் கலாமன்ற நிறுவுனர் அருட்கலாநிதி N.M. சவிரிமுத்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியற் துறைத்தலைவர் கலாநிதி (திருமதி) C.C.A. சிவபாலன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறை விரிவுரையாளர் திருமதி M.W. சுரேந்திரராஜ் ஆகியோரும், ஆலோசகர்களாக களனிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஷேர்லி லால் விஜேசிங்க, அருட்கலாநிதி S.J. இம்மானுவேல், அருட்கலாநிதி A.F. ஜெயசேகரம், அருட்திரு M.V.E. இரவிச்சந்திரன் (இயக்குனர், புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரி), அருட்திரு M. யூட் சுதர்சன் (அதிபர், மருதனார்மடம் இறையியல் கல்லூரி), கலாநிதி E.Y.A. சார்ள்ஸ் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணினித்துறை) ஆகியோரும் பணியாற்றுகின்றனர்.

'பாதுகாவலன்' வாசக அன்பர்களுக்கும் இம்மாநாட்டில் பங்குபற்றிப் பயன்பெற சந்தர்ப்பம் வழங்கப்படும். மேலதிக தகவல்களை கார்த்திகை மாத இறுதியில் வெளிவரும் காவலனில் எதிர்பாருங்கள்.

# நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வர முடியுமா?

## யோவான் நற்செய்தி 1:46




**வன்னிவாழ் இதயம்**
**ம. சூசைமுத்து**

"இறைமகன் இயேசு முதற்சீடர்களை தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் பிலிப்பு, நத்தனியேலை அழைத்து இயேசுவிடம் அறிமுகப்படுத்தும் முயற்சியின் போது நடைபெற்ற உரையாடலாகும். இறைவாக்கினர்களும், திருச்சட்ட நூலில், மோசேயும் குறிப்பிட்டுள்ளவரை நாங்கள் கண்டு கொண்டோம். அவர் நாசரேத்து ஊரைச்சேர்ந்த யோசேப்பின் மகனான இயேசுவே என்று கூறினார். பிலிப்புவின் கதையைக்கேட்ட நத்தனியேல் வியப்புடன் **"நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரக்கூடுமோ?"** என்றார். பிலிப்பு அவரிடம் வந்து பாரும் என அழைத்தார்.

இங்கு எமது சிந்தனையை சீர்தூக்கிப் பார்ப்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. இறைவனின் திட்டமும், திருக் குடும்பத்தின் தியாகம் நிறைந்த வாழ்க்கை முறைகளும், இயேசு மண்ணக வாழ்வின் போது மேற்கொள்ளப்பட்ட பரிவு, இரக்கம் மிகுந்த மனித நேயப்பணிகளை ஆற்றி மனிதங்களை புனித வாழ்வுக்கு அழைத்துச் செல்வதற்காக தாம் பல துன்பங்களை ஏற்று வாழ்ந்தார். முதலில் மானிட மகனாக நாசரேயனாக சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படாதவராக, துன்புறும் ஊழியனாக, யாவராலும் கைவிடப் பட்டவராக தந்தையின் திட்டத்தை நிறைவேற்ற இறுதி வரை உறுதியா இருந்து பாவத்தினால் கெட்டழிந்த மனித இனத்தை மீட்டெடுத்து விண்ணக வாழ்வுக்குத் தகுதியுள்ளவர்களாக்கி மண்ணுலகில் கிறிஸ்தவம் மலர்ந்து மணம் பரப்ப வழிவகுத்தார்.

"இயேசு மானிடமகன்"

மன்னுயிரை மீட்டெடுக்க இறைமகன் இயேசு மானிட மகனாக வந்தார். மானிடமகன் என்ற சொற்பதம் நற்செய்திகள் நான்கிலும் எழுபது தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசு பெத்லகேமில் பிறந்த போதிலும் அவரை பெத்லகேமோடு தொடர்புபடுத்திக் கூறப்படுவது குறைவு. நாசரேத்தோடு தான் தொடர்புபடுத்திக் கூறுவது தான் அதிகமாகவுள்ளது. காரணம் மத்தேயு 2:23ல் கூறப்படுவது போல், ஏரோது மன்னனின் நெருக்கடி காரணமாக திருக்குடும்பம் பெத்லகேம் ஊரை விட்டு இடம் பெயர்ந்து எகிப்திற்கு ஓடிப்போய் சில நாட்களின் பின் கலிலேயாவில் உள்ள நாசரேத்து என்னும் ஊரில் இயேசுவுக்கு முப்பது வயது வரை வாழ்ந்தார். ஆகவே தான் அவருக்கு **நசரேயனான இயேசு** எனும் பெயர் வழக்கத்தில் வந்தது. இவ்வாறு நசரேயன் என அழைக்கப்படுவார் என இறைவாக்கினர்கள் உரைத்தது நிறை வேறியது.

**நசரேயன் என்பதன் பொருள் :**

வேறு பிரிக்கப்பட்டவர் என்பதாகும். எபிரேயர் 7: 26ல் குறிப்பிடுவது போல் இயேசு, தூயவர், கபடற்றவர், மாசற்றவர், பாவிகளிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு வானகங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டவர்.

**நசரேத் ஊரின் நடைமுறைகள்**

அங்கு பல கலப்பின மக்களும் வாழ்ந்தார்கள். யூதரும் புறசாதி மக்களும் கலந்து வாழ்ந்தார்கள். ஒழுக்க நெறி தவறிய மக்கள் வாழ்ந்து வந்த காரணத்தால் இக்காலத்தில் நசரேத்து ஒதுக்கப்பட்டு வெறுக்கப்பட்டு மிக மோசமான ஊராக கணிக்கப்பட்டிருந்தது.

பழைய ஏற்பாட்டின் எண்ணிக்கை ஆகமத்தின் ஆறாம் அதிகாரத்தில் கூறப்படுகின்ற நசரேயர்களில் ஒருவர் அல்ல இறைமகன் இயேசு. அந்த நசரேயர்கள் இறந்தவர்களின் உடல்களை தொடமாட்டார்கள். ஆனால் இயேசு மரித்தவர்களைத் தொட்டார். அவர்கள் திராட்சைகனிகள் இரசம் உண்ணவோ குடிக்கவோ மாட்டார்கள். ஆனால் இயேசு கனிகளை உண்டு இரசத்தை குடித்தார். விருந்துகளில் பங்கு கொண்டார். புறக்கணிக்கப்பட்ட மக்களுடன் தன்னை இணைத்துக் கொண்டார். ஏழை சாதாரண மக்களுடன் நெருங்கிப் பழகினார். தொழுநோயதளர்களை தொட்டு குணப்படுத்தினார். பாவிகளை தேடிச் சென்று மனம்மாற்றினார். எனவே இறைமகன் இயேசு உலக வரலாற்றில் அதி உன்னத இடத்தை தந்தையின் விருப்பப்படியே வாழ்ந்து காட்டினார். அவர் தமது பெயரை சமயங்களின் நகரமான எருசலேமோடு இணைத்துப் பேசவில்லை. சட்டங்களின் மையமான ரோமாபுரியையும் குறிப்பிடவில்லை. தத்துவ மேதைகள் நிறைந்த அத்தேனா பட்டணத்தைச் சொல்லவில்லை. அனைவராலும் இழிவாக கருதப்பட்ட நசரேத்துடன் தமது பெயரை இணைத்துக் கொண்டார். மக்களால் வெறுக்கப்பட்ட இடத்தை இயேசு மகிமையால் அங்கீகரித்தார். நசரேயனாகிய இயேசுவின் பெயர் - மீட்பின் சின்னமாகிய சிலுவையின் உச்சியில் பிலாத்துவினால் உயர்த்தப்பெற்றது. (I.N.R.I) **இயேசு நசரேனு யூதருடைய அரசன்** (யோவான். 19:19) அது மட்டுமா இயேசு உயிர்த்தெழுந்த பின் கல்லறையைத் தேடி வர்தவர்களிடமும் தேவ தூதர்கள் "நீங்கள் நசரேத்து இயேசுவையா தேடுகிறீர்கள்? அவர் இங்கில்லை உயிர்த்தெழுந்துவிட்டார்" என்று தான் கூறினார்கள் . இதுமட்டுமா தமஸ்கு நகரில் பவுல் அடிகளார் குதிரையிலிருந்து மயங்கி விழுந்த நிலையில் "ஆண்டவரே நீர் யார்?" எனக் கேட்ட போது விண்ணகத்தில் இருந்து இயேசு, "நீ துன்பப்படுத்துகிற நசரேனாகிய இயேசு நானே" என்றார் (திருத்தூதர் பணி. 22:8) .. நாசரேத்து என வெறுத்து ஒதுக்கப்பட்ட பெயர் விண்ணகம் வரை சென்று அங்கிருந்து மண்ணகம் வந்து எதிரொலிக்கிறது என்றால் ஆச்சரியமான விடயமல்லவா?..

**எமது சிந்தனைக்கு :**

நாம் வாழும் சூழல் , இடம், தொழில், சமூகப்பணி, தொட்டறிவு, பட்டறிவு, பொருளாதாரம் ஆகியவை எவ்வாறாக அமையப்பெற்றாலும் எம்மில் வேதாகம அறிவு கிறிஸ்தவப் பண்பு நெறிகள் நிறைவாக இருக்குமானால் எமது கிறிஸ்தவ சீடத்துவப்பணி மலர்ந்து மணம் பரப்பும், ஒளி வீசும்.



# நம் மீட்பின் கருவி செபமாலை

அருட்பணி.ம.நிர்மலராஜ் செ.தா

*"உருவிலான் கருவாகி உலகின் ஒரு மகன் உதிப்பக் கருவிலான் கருத்தாங்கி கன்னித்தாய்.ஆயினையே"*
*(தேம்பாவணி)*

அன்று கடவுளின் பிறப்பு அம் மண்ணில் மலர அன்னையின் "ஆம்" என்ற வார்த்தையும் வாழ்வும் தேவைப் பட்டது. இன்று நாம் விண்ணில் பிறக்க வும் மீட்பின் அருளைப் பெறவும் அன்னையின் அருளும் பரிந்துரையும் தேவைப்படுகிறது. விண்ணகத்தையும் மண்ணகத்தையும் இணைக்கும் பணி யைத்தான் அன்னை தம் வாழ்வாக கொண்டிருக்கிறாள். எனவே தான் இறை வன் வரைந்த ஓவியங்களிலே அழ கோவியம் அன்னை மரியாள் என்கின் றோம்.

**"என் உடல் முழுவதும் நாவாக மாறினாலும் அன்னையின் புகழைப்பாடி தீர்க்க முடியாது"** என்கிறார் புனித பொன்வாய் அருளப்பர். எனவேதான் "கிறிஸ்துவை அறிய வேண்டுமா? அன்னை மரியாளிடம் செல்லுங்கள்" என்கிறார் திருத்தந்தை 6ம் சின்னப்பர். நமது அன்னை கன்னி மரி யாள் உலகின் தீமையான போக்கையும், மானிடரின் மாறுபட்ட நிலையையும் உணர்ந்து ஆன்மாக்கள் அழிந்து போக கூடாது என்பதற்காகவும் அவர்களை மீட்பின் பாதைக்கு வழிநடத்திச் செல்ல வும் இறைவனின் இரக்கத்தையும் அன்பையும் பெற்று இறைமக்களாக்கப்பட வேண்டும் என்பதற்காக தாயன்போடு தமது பரிந்துரையையும் பாதுகாப்பையும் திருச்செபமாலை மூலமாக பெற்று தந்து இரக்கத்தின் அன்னையாக திகழ்கிறார்.

நாம் அறிவியலும், தொழிநுட்ப மும் ஆய்வுகளும் நிறைந்த உலகில் வாழுகின்றோம். திருச் செபமாலை அன்னையின் வரலாற்று நிகழ்வுகள். நாம் அன்னையின் மீது அளவுகடந்த பக்தியையும் வணக்கத்தையும் செலுத்த நம்மைத் தூண்டுவதாக அமைகின்றது. கடந்த 5 நூற்றாண்டுகளாக மேற்கத்தேய திருச்சபையில் செபிப்பதும் முதன்மை இடம் பெறுகின்றது.

### "வரலாற்றில் அன்னையின் மீது கொண்ட பக்தியும் வெற்றியும்"

1571ல் லெபான்தோ என்ற இடத்தில் முகமதியருக்கும் கிறிஸ்தவர்க ளுக்கும் கடற்போர் மூண்டது. செபமா-லையை மக்களும் போர்வீரர்களும் செபித்ததனால் கிறிஸ்தவர்களுக்கு வெற்றி கிடைத்தது. 1572ல் அக்டோபர் திங்கள் 7ம் நாள் வெற்றி அரசி என்று முடிசூட்டு விழா கொண்டாடினர். அன் றைய தினம் பாப்பரசர் 5ம் பத்திநாதர் செபமாலையை திருச்சபையின் செபம் என அறிவித்தார். 1863ம் ஆண்டு கிறிஸ்தவர்களுக்கும் துருக்கி யருக்குமிடையில் மிகப்பெரிய போர் நடந்து கிறிஸ்தவர்கள் தோல்வி அடைந்து விடுவார்கள் என்ற அச்சம் ஏற்பட்டது. அந்த வேளையில் நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் செபமாலையை பக்தியுடனும் ஈடுபாட்டுடனும் மனம் ஒன்றித்து செபித்தனர். வெற்றி அடைந்தனர்.

அன்றைய பாப்பரசர் 13ம் கிர கோரியர் செபமாலை அன்னையின் விழாவை ஆண்டு தோறும் அக்டோபர் 7ம் திகதி கொண்டாடும்படி கட்டளையிட் டார். அதன்படி இன்று வரை அன் னைக்கு மகிமை சேர்க்கும் வகையில் நினைவு கூரப்படுகின்றது. அதன் பின்பு 1858ம் ஆண்டு பெப்ரவரி திங்கள் 11ம் நாள் லூர்த்து நகரில் பெர்னனெத் எனும் ஏழைச் சிறுவனுக்கு காட்சி கொடுத்து செபமாலை சொல்லும்படி பணிக்கிறார். இதன் பின்பு தான் 1854ம் ஆண்டு பாப்பரசர் 9ம் பத்திநாதர் மரியாளின் மாசின்மை பற்றிய பிரகடனம் ஒன்றை வெளியிட்டார். 1858ம் ஆண்டு மார்ச் திங்கள் 25ம் நாள் மங்கள வார்த்தை விழாவின் போது "நானே அமல உற் பவம்" என அன்னை தன் பெயரை அறிவித்தார். 1917ம் ஆண்டு மே திங்கள் 13ம் நாள் முதல் அக்டோபர் 13ம் நாள் வரை பாத்திமாவில் 6 காட்சிகளின் போது உலகின் போர் அமைதி ஏற்பட செபமாலை செபிக்கும்படி பணித்தார். அவ்வாறே செபமாலை மூலம் போரும் அமைதிக்கு வந்தது.

நாம் வாழும் இச்சமூகம் நம் பிக்கை அற்ற தன்மையையும், அவவிசு வாச போக்கையும் அதிரித்து கொண்டி ருக்கும் இக்கால சூழ்நிலையில் அன்னை பற்றிய வரலாற்று உண்மைகள் நம் விசுவாசத்தை வளர்க்க பெரிதும் உதவும்.

### செபமாலையின் வேறு பெயர்கள்

**I. ஏழைகளின் செபம்**

கி.பி 4ம் நுற்றாண்டில் வாழ்ந்த படிக்கத் தெரி யாத பாமர மக்களிடம் விவ-லியம் இல்லை. இருந்தாலும் வாசிக்கத் தெரியாது. திருப்பாடல்கள் கொண்டு அவர்களால் செபிக்க முடியவில்லை. ஆதலால் அவர்களுக்கு கர்த்தர் கற்பித்த செபமும், அருள் நிறைந்த மரியா செபமும் கற்பிக்கப்பட்டது. இதனால் தான் செபமாலை ஏழைகளின் செபம் என அழைக்கப்பட்டது.

**II. இறைவாக்குச் செபம்**

செபமாலை முழுவதுமே விவிலி யம் சார்ந்தவை. கபிரியேல் வானதூதர் தேவமாதாவை வாழ்த்தியது. (லூக்.1:28) எலிசபெத் அன்னையை வாழ்த்தியது. (லூக்.1:42) மற்றும் யூத பெண்கள் வாழ்த்தியது. (லூக்.11:27-28) ஒட்டு மொத்த சுருக்கமே செபமாலையா-கும்.

**III. நற்கருணையின் செபம்**

அருள் நிறைந்த மரியே வாழ்க என்ற செபம் தான் மீட்புத்திட்டத்தின் அடிக்கல். பழைய உடன் படிக்கையும் 10 கட்டளை யையும் சுமந்தது. உடன்படிக்கைப் பேழை புதிய உடன் படிக்கையாம் இயேசுவை சுமந்து மரியா உடன்படிக்கை பேழை உறவின் இனிமை மேலும் இறை பிரசன்னம். (எண் 10:35-36) மரியாவும் இறைபிரசன்னத்தின் மொத்த உருவம். மரியென்னும் உயிருள்ள நற்கருணை பேழையில் தான் கடவுள் தன் மகனை உள்ளடக்கினார். புனித அல்போன்ஸ் லிகோரியார் "நற்கருணை பக்தியை பற்றி பேச விரும்புகிறவர்கள் மரியன்னை பக்தியான செபமாலை பற்றி தெரிந்திருக்க வேண்டும்" என்றார்.

**IV தமதிருத்துவ செபம்**

மீட்பு என்பது கடவுளின் கொடை யாகும். இந்த மீட்புத்திட்டம் நிறைவேற தன் மகனையே இவ்வுலகிற்கு அனுப்ப திட்டமிட்டார். இயேசுவின் பிறப்பு இல்லை என்றால் நற்கருணை இல்லை, மீட்பும் இல்லை, இந்த மீட்பை, நற்செய்தியை என்றும் கன்னியான அன்னை மரியா தன் உதரத்தில் தாங்கினார். அந்த மரியாளை புகழும் போது அப்புகழ்சிக்கு காரண கர்த்தாவாகிய இயேசுவை-யே புகழ்கின்றோம். கடவுளையே புகழ்கின்றோம். அன்னையிடம் தங்கிய தூய ஆவியை புகழ்கின்றோம். மூவொரு கடவுளின் சங்கமம் தான் அன்னை மரி யாள். (லூக். 1:45)

**அறிவியல் உலகில்**

மருத்துவ உலகில் ஆழ்ந்த அறிவு கொண்டு விளங்கியவர் லூயி பாஸ்டர் என்பவர். இவர் தான் மருத்துவ சேவையை கண்டுபிடித்துக் கொடுத்தவர். ஆழமான கத்தோலிக்க விசுவாசத்தில் ஊன்றியவர், மிகவும் எளிமையா-னவர். இவர் ஒருமுறை பிரான்சில் பரிஸ் நகரில் இருந்து வேறொரு இடத்திற்கு புகையிரதத்தில் பயணித்துக் கொண்டிருந்தார். அப்போது கையில் அடக்கமுடன் செபமாலையை செபித்து கொண்டிருந்தார். அப்பொழுது அதே பெட்டியில் சில இளைஞர்கள் ஆடியும் பாடியும் கிண்டல் செய்து லூயி பாஸ்டரை நோக்கி "அந்த செபமாலையை எறிந்து விட்டு எம்முடன் ஆட வாருங்கள் என கிண்டல் செய்தனர்". அப்போது லூ யி பாஸ்டர் அமைதியாக சட்டையில் இருந்த [Visiting Card] அட்டையை காண்பித்தார். அதில் லூயி பாஸ்டர், முனைவர், ஆராய்ச்சியாளர், அறிவியல் ஆய்வு மையம் என குறிப்பிட்டதை கண்டு வாயடைத்துப் போயினர்.

நாம் வாழும் இந்த அறிவி யல் தொழில்நுட்பம் நிறைந்த உலகி லும் திருச்செபமாலையின் பக்தியும் விசுவாசமும் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று.

**திருச்செபமாலை பற்றி புனிதர்களின் கூற்று**

- செபமாலை பக்தியின் திருத் தந்தை எனப்படும் 13ம் சிங்கராயர் கூறுவார் "செபமாலை பக்தி முயற்சியில் நாம் பங்கெடுக்கும் போது மரியன்னை யின் அரவணைப்பில் நாம் இருக்கின் றோம்" என்கின்றார்.
- "செபமாலை செபிக்கும் நேரம் மரி யாளின் தோழமையுடன் மூவொரு இறை வனுடன் கொள்ளும் ஒன்றிப்பு பொழு-தாகும்" என்று புனித குழந்தை தெரேசாள் கூறுகின்றார்.
- "கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டு மென்றால் மரியாவின் பக்தராக இருக்க வேண்டும்" என திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் கூறுகின்றார்.
- "திருப்பலிக்குப் பின் அதிக தெய்வீக சக்தி கொண்டது திருச்செபமாலை" என்கின்றார் புனித சாள்ஸ் பொறோமியா.
- "இருட்டிலும், நோயிலும், சிறையிலும் செபிக்கக்கூடிய செபம் செபமாலை" என்று செப மாலை மாதா துறவற சபையை உருவாக்கிய இறையடியார் B.A. தோமஸ் O.M.I அடிகள் கூறியுள்ளார்.

இவ்வாறு வர லாற்றிலும் வாழ்க்கை அனுபவத்திலும் திருச்செப மாலையின் மேன்மையும் புனிதமும் போற்றுதலுக்குரியது.

கடந்தகால யுத்த அனர்த்தத்தின் போது பல்வேறு நிலைகளில் காப் பாற்றபட்டவர்களின் அனுபவ பகிர் வின் போது திருச்செபமாலையின் மகத்துவத்தையும் அன்னை மரியாளின் தேவ பராமரிப்பையும் சாட்சியமாக கூறியுள்ளார்கள். எனவே நாமும் வாழ்க் கையின் போராட்டத்தில் சிக்குண்டு நோயி லும், வேதனையிலும், இழப்புக்களிலும், பிரிவினைகளிலும், வறுமையிலும், வெறுமையிலும் தள்ளாடி வாழ்க்கையின் விரக்தி யின் விளிம்புகளில் அன்னையின் பரிந்துரையை திருச்செபமாலை மூலமாக அவள் தயவை நாடுவோம்.

# அன்பில் மலரும் திருச்சபை

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் (அமதி)

**"அன்பு பொறாமைப்படாது. தற்புகழ்ச்சி கொள்ளாது. இறுமாப்பு அடையாது. இழிவானதைச் செய்யாது. தன்னலம் நாடாது. எரிச்சலுக்கு இடம்கொடாது. தீங்கு நினையாது. அது தீவினையில் மகிழ்வுறாது. மாறாக அது உண்மையில் மகிழும். அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும். அனைத்தையும் நம்பும். அனைத்தையும்எதிர்நோக்கியிருக்கும். அனைத்திலும் மனஉறுதியாய் இருக்கும்"** (1கொரி. 13).

"என் தந்தை என்மீது அன்பு கூர்ந்தது போல் நானும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத் திருங்கள். நான் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளதுபோல நீங்க ளும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே எனது கட்டளை" (யோவான் 15:10.12). அன்பே கடவுள். அன்பே கிறிஸ்து. அன்பின் வடிவில் பயணிப்பதே திருச்சபையாகும்.

"நாம் கடவுள்மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல. மாறாக, அவர் நம்மீது அன்புகொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில்தான் அன் பின் தன்மை புரிகின்றது" (1யோவான் 5:10).

திருச்சபை ஏகம், புனிதம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம் ஆகிய நாற்பண்புகளைக் கொண்டது. அதாவது, திருச்சபை தன் னுள் பிளவு படாமல் ஒன்றாக இருக்கின்றது. திருச்சபை தூய் மையில் பங்கெடுக்கின்றது. அனைவரையும் அரவணைத்து பாரபட்சமில்லா மல் அன்பு செய்வதால் திருச்சபை கத்தோலிக்கம் என அழைக்கப் படுகின்றது. அப்போஸ்தலர்கள் எவ்வாறு கிறிஸ்துவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இயேசு இன்பத்தைப் பெற்று, மற்றவர்களுக் குக் கொடுக்க அனுப்பப்பட்டார்களோ அவ்வாறே திருச்சபை யும் இன்றைய காலகட்டத்தில் இயேசு அன்பை அனுபவித்து, அறிவிக்க அனுப்பப் பட்டு, அப்போஸ்தலத்தில் நிறைவுபெறுகின்றது.

வானியலில் பாரிய புரட்சி ஏற்பட்டது எவ்வாறெனில் தொலமியின் புவி மையக்கொள்கை நிராகரிக்கப்பட, கொப்பர்நிக்க சின் சூரியமையக் கொள்கை ஏற்கப்பட்டது. இவ்வாறே 2ம் வத் திக்கான் சங்கம் திருச்சபை யில் பாரிய மாற்றத்தைத் தோற்றுவித்தது. திருத் தந்தை, ஆயர்கள் போன்றோரை மையப்படுத்தி இயங்கிய திருச்சபை கிறிஸ்துவை மையப் புள்ளியாகக் கொண்டு புதிய முறையில் இயங்க ஆரம்பித்தது.

திருச்சபையும் 2ம் வத்திக்கான் சங்கத்தின் பின்னர், கிறிஸ்துவை மையப் புள்ளியாகக் கொண்டு, புதிய ஒழுக்கில் இயங்க ஆரம்பித் தது. நாம் அனைவரும் சகோதர, சகோதரிகளாக, புதிய உடன் படிக்கையின் பங்காளராகப் பங்கெடுப்பது சாத்தியமானது. இறை வார்த்தைக்கு மீள்வடிவம் கொடுத்து, ஆண்டவரின் ஆவியி-னால் இயக்கப்படும் இறைமக்களாக திருச்சபையில் உருவாக்கம் பெற்றுவருகின்றோம். "உண்மையான திராட்சைக்கொடி நானே. என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர். நான் உங்களோடு இணைந்திருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்திருங்கள். (யோவான் 15: 1, 4-5).

# காவலன் கலசம்

## கண்ணீர் வெள்ளத்தை அணைப்பாயோ தாயே!

பின்னிவரும் துயரங்கள் என்னை நோக்கிப்
புயலாகப் படையெடுக்க இதயம் வெந்து
உன்னிடமே விழிக்குளங்கள் உடைப்பெடுக்க
ஓடிவந்தேன்! ஏழைகளின் துயரந் துடைக்க
வன்னியிலே கோயில் கொண்டு அருளை வாரி
வழங்குபவளே! வற்றாத ஜீவ நதியே!
கன்னிமரி மாதாவே! எளியோர் மீது
கருணை மழை பொழிய
மகனைக் கேளும் அம்மா!



நோயகல மருந்தறியேன்! கடந்து போன
நாட்களிலே மனவமைதி இல்லை! மனித
நேயங்கள் எவரிடமும் துளியும் இல்லை!
நெருப்பினிலே புழுவாகத் துடித்து விம்மித்
தாயுன்னைத் தேடி மடு அடைந்துவிட்டேன்!
தேம்பியழும் பாவியைக் கைதூக்கியணைக்க
மாயவனின் சூழுலகில் வாழும் எனக்காய்
மனிதமகன் யேசுவை நீர் கேட்டு அருளும்!

கவிஞர் மு. சிங்கராயர்



ஒக்ரோபர் 01
முதியோர் தினம்

## நாளைய உலகில்!

நேற்று என் பாட்டனிட்ட விதையிலிருந்து
வேர் கொண்டதொரு விருட்சம்
இன்று அதனருகிலிருந்து உணர்கின்றேன்
என் பாட்டனின் உயிர் மூச்சை அதன் அசைவில்!

வெறும் ஓலை தனில் - நீதி தந்தவர்
பெரும் ஞானி வள்ளுவர்
அதன் உண்மைகளில் தெளிகிறேன் என் வாழ்வில்

தன் கவிகளில் வீரம் சொல்லித்தந்தவர்
என் பாட்டன் பாரதி - அவர் வழிகளில்
தொடர்கிறேன் என் வாழ்வின் எல்லைகளை!

வாழ்நாள் முழுவதும் தன் கனாக்களை
வென்றார் மாமேதை கலாம்
அவரது இறுதி கனாக்களை நான் தொடர்கிறேன்
என் வாழ்வின் தேடலாய்!

வாழ்ந்து மறைவதே வாழ்வென்றால்
வாழ்வின் பொருளெதுவோ?
தொடரட்டும் நம் பாட்டன் முப்பாட்டனின் கனவுகள்

விழித்தெழு தோழா!
ஒலிக்கட்டும் உன் நாமம்
விளங்கட்டும் உன் வாழ்வு - நாளைய தலைமுறைக்கு
ஒரு நடைபாதையாய்!
முன்னோர் காட்டிய நெறியில்.....

த. ருச்சிந்ரா
வணிகவியலும் முகாமைத்துவமும்
களனி பல்கலைக்கழகம்

## ஆசிரியருக்கு எழுதப்பட்ட வரலாற்றுப் புகழ்மிக்க கடிதம்

ஒக்ரோபர் 06
ஆசிரியர்தினம்

ஆபிரகாம் லிங்கன் தன் மகனின் ஆசிரியருக்கு எழுதிய நெகிழ்ச்சி தரும் கடிதம்! அரியதோர் வரலாற்று நிகழ்வு

அனைத்து மனிதர்களுமே நேர்மையானவர்களாக, உண்மையானவர்களாக இருக்க மாட்டார்கள் என அவனுக்கு சொல்லித்தாருங்கள். ஆனால், பகைவர்களுக்கு நடுவில் அன்பான நட்புக்கரம் நீட்டும் மனிதர்களும் உண்டென அவனுக்குத் தெரிவியுங்கள்.

பொறாமை அவன் மனதை அண்டாமல் கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து ஒடுங்கிப்போவது கோழைத்தனம் எனப் புரிய வையுங்கள்.

புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்கு திறந்துகாட்டுங்கள். அதேவேளையில் இயற்கையின் ஈடில்லா அதிசயத்தை ரசிக்கவும் அவனுக்கு கற்றுக் கொடுங்கள். வானில் பறக்கும் பட்சிகளின் புதிர்மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் துரித்தையும், பசுமையான மலை அடிவார மலர்களின் வனப்பையும் அவனுக்கு ரசிக்க கற்றுத் தாருங்கள்.

ஏமாற்றுவதை விடவும் தோல்வி அடைவது எவ்வளவோ மேலானது என்பதை அவனுக்குக் ,கற்றுக் கொடுங்கள். மற்றவர்கள் தவறு என விமர்சித்தாலும்கூட சுயசிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.

மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரட்டுக்குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுக அவனை தயார்படுத்துங்கள். அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும் என அறிவுறுத்துங்கள். எனினும், உண்மை எனும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்தெடுக்க அவனுக்கு கற்றுக்கொடுங்கள்.

துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்கு கற்றுக்கொடுங்கள். கண்ணீர விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்கு புரிய வையுங்கள்.

போலியான நடிப்பை கண்டால் எள்ளி நகையாடவும், வெற்று புகழுரைகளை கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்கு பயிற்சிகொடுங்கள். அவனை கனிவாக நடத்துங்கள். அதிக செல்லம் கொடுத்து உங்களை சார்ந்திருக்க செய்ய வேண்டாம்.

சிறுமை கண்டால் கொதித்தெழும் துணிச்சலை அவனுக்கு ஊட்டுங்கள். அதேவேளையில் தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையையும் அவனுக்கு சொல்லி கொடுங்கள்.

இது ஒரு மிகப்பெரிய பட்டியல்தான்.... இதில் உங்களுக்கு சாத்தியமானதையெல்லாம் கற்றுக் கொடுங்கள். அவன் மிக நல்லவன். என் அன்பு மகன்.

## முதியோர் எம் செல்வங்கள்....

முதியவர்களை ஒவ்வொரு மனிதனும், சமூகமும் கண்ணியமாகவும், கௌரவமாகவும் அவர்களை மதிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் முகமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஆண்டுதோறும் அக்டோபர் 1 ம் திகதியை சர்வதேச முதியோர் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் கொண்டு வரப்பட்ட பிரிவு 45/106 தீர்மானத்திற்கமையவே இந்த தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி முதன் முதலாக 1991 ஆம் ஆண்டு சர்வதேச முதியோர்தினம் உலகெங்கும் கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டுகளும் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகள் இந்த தினத்தை தேசிய விடுமுறை தினமாகவும், ஜப்பானில் மூத்தோருக்கு கௌரவம் செலுத்தும் தினமாகவும் இது அனுசரிக்கப்படுகின்றது.



## நற்கருணை நாதர்

அழிந்து போகும் உணவிற்காக
அலைந்து திரியும் மானிடன் நான்
அழியாத உணவாய் அவனியிலே
அவதரித்த அற்புதரே நற்கருணை நாதரே

அம்மாவின் மடியில் அன்புக் குழந்தையாய்
அப்பாவின் கையில் அருளின் வடிவமாய்
அல்லல்படுவோர்க்கு ஆறுதலின் தேவனாய்
அப்பத்தின் சாயலில் நற்கருணைப் பேழையில்

அலைந்தேன் அலைந்தேன் ஆறுதலின்றி
அல்லும் பகலும் அழுது புரண்டேன்
அன்றொரு நாள் உம்மை உணர்ந்தேன்
அதிசயம் அதிசயம் என்னை மறந்தேன்

அம்மா அப்பா அன்பு பொய்க்கலாம்
அத்தனை சொந்தமும் பொய்க்கலாம்
அற்புத உருவில் அமர்ந்திருக்கும்
அப்பாவே உம் அன்பு பொய்க்காது

அன்னையின் உதரத்தில் என்னை அறிந்தீர்
அகத்தின் கண்களால் என்னைப் பார்த்தீர
அன்புக் கரங்களால் என்னைத் தொட்டீர்
அமலனே உன் கருணையை யான் மறவேன்.

ஜோ. பெல்சியா
24, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

## புதுயுகம் மலரட்டும்



எங்கும் செந்நிற ஆறு ஓய்ந்து
வெண்ணிற வேட்டிகள் போட்டியிட்டு
காட்டுகின்றனர் தன்னிலையிழந்து பாட்டிசைத்து
இனவாதத்தை நிலை நாட்டிடவே.

கையுக்குள்ளே இருந்து கொண்டு
காட்டுகிறது வெளி உலகு தனையே - சிறு
மெய்யளவு கூட தெரியாது பொய்யதிலே
வாழ்கின்றனர் கற்பனைச் சிறகினிலே.

கீதையின் பாதையில் பணி யுத்தம்
சினிமாவிலே எம் வாழ்க்கை நித்தம்
சீரியலால் சீரழிகிறது குடும்பம் மொத்தம்
சிறுவயதிலே பகை மதுபானத்தின் சித்தம்.

இனியும் வேண்டாம் இத்தனை கொடுமை
இதனால் பலர் வாழ்க்கையோ நித்தம் வறுமை
இனியொரு புதுயுகம் மலரட்டும் - அது
எல்லோர் மனங்களிலும் நிறையட்டும்.

பீ.கிருஷிகன் பியோ (தரம் -9)
புனித ஹென்றியரசர் கல்லூரி

## உன்னையே நீ அறிவாய்

சிந்தனைக்கு

ஒருமுறை ஒரு அகங்காரம் கொண்ட கொசு சிங்கத்திடம் ஒரு சவால் விட்டது. வலிமையான விலங்குகளில் அரசனான உன்னை வெறுப்பேற்றி எரிச்சலடையச் செய்ய என்னால் மட்டுமே இயலும் என்று தம்பட்டம் அடித்தது. அந்தச் சிங்கத்தின் மூக்குப் பகுதியில் ரீங்காரமிட்டு அதன் பெரிய நகங்களை வலிமையான பற்களை கேலி செய்து எரிச்சல் மூட்டியது. மிகுந்த ஆத்திரமடைந்த சிங்கத்தால் கொசுவை ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்த வெற்றியால் பெருமை கொண்ட கொசு அங்கும் இங்கும் பறந்து திரிந்து தன் வெற்றியை பறைசாற்றிக்கொண்டே வந்தது. மமதையில் சிலந்தி வலையில் விழுந்த கொசுவைப் பிடித்து சிலந்தி தன் உணவாகக் கொண்டது. கொசு சிங்கத்தின் பலவீனத்தை அறிந்து வைத்திருந்தது. ஆனால் தன் பலீனத்தை அறியாமல் வெற்றி ஆணவத்தில் மாய்ந்தது. அடுத்தவனைப் பற்றிய அறிவை விட நம்மைப் பற்றிய அறிவே சிறந்த அறிவு.




பிறரைப்பற்றி அறியும் முன் உன்னைப் பற்றி அறி. பிறர் குற்றத்தைப் பற்றிப் பேசுவதன் முன் உன் குற்றத்தைக் களை.

## சிந்திக்க ஓர் சித்திரம்



# காவலன் கலசம்




## என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ.அன்புராசா அமதி

*(மேனன், மாங்குளம்)*

**கேள்வி: தோல்விகளைச் சந்தித்துச் சந்தித்து இனி ஒன்றும் செய்வதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கின்றேன். இதுபற்றி நீங்கள் என்ன கருது கின்றீர்கள்?**

**பதில்:** ஓரிடத்தில் யானைகள் கட்டப்பட்டுக் கிடந்தன. அவதானித்தபோது அவை மெல்லிய சங்கிலிகளால் கட்டப்பட்டு இருந்தன. அவதானித்தவன், "இவ்வளவு மெல்லிய சங்கிலிகளை இலகுவாக அறுத்துவிட்டு இவ் யானைகள் சென்றுவிட்டதா?" என யானைப்பாகனிடம்கேட்கின்றான். பாகனோ, 'இந்த யானைகள் மிகச் சிறியவையாக இருக்கும்போதே இந்த சங்கிலிகளில்தான் கட்டி வைத்திருந்தோம். இவை, வளர வளர இச்சங்கிலிகளை அறுக்க முடியாது என்ற எண்ணமும் வளர்ந்து, இவை- களை அறுக்க அவை ஒருபோதும் முயற்சித்ததில்லை!' என்றான். அவ்வாறு மனிதர்களும் தங்களுடைய வாழ்வில் ஏற்பட்ட - ஏற்படுகின்ற சில தோல்விகளால் முயற்சிக்காமல் விட்டுவிடுகிறார்கள். அறிஞர் எடிசன் ஒரு தடவை, "என் முயற்சிகள் என்னைப் பலமுறை கைவிட்டதுண்டு. ஆனால், நான் முயற்சிகளைக் கைவிட்டதில்லை' எனக் குறிப்பிட்டார். நம் செயல்கள் தோல்வி காணலாம். ஆனால், நம் எண்ணங்கள் வெற்றியை நோக்கியே வீறுநடை போடவேண்டும். மேனன், 'முயற்சி திருவினையாக்கும்'.

*(மலரவன், முல்லைத்தீவு)*

**தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் ஒரு முடிவுக்கும் வராமல் அப்படியே கிடப்பில் கிடக்கிறது. இவர்களை, நம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று பார்ப்பதுகூட இல்லையே!**

மலரவன், நம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று அவர்களைப் பார்ப்பதை நாளோடுகளில் நீங்கள் பார்க்கவில்லையா? வானொலிச் செய்திகளில் நீங்கள் கேட்கவில்லையா? தமிழ் அரசியல் கைதிகளைச் சென்று பார்க்கிறார்கள்! பார்த்துவிட்டு, அவர்கள் தங்கள் வேலைகளைப் பார்க்கிறார்கள்!

*(மதுராங்கன், மல்லாவி)*

**பேருந்துகளில்கட்டணங்கள்மிகஅதி- கமாக உயர்த்தப்பட்டுள்ளது. இப்படியிருக்கும்போது கொடுக்கும் பணத்தில் மீதிப் பணத்தைக்கூட நடத்துநர்கள் தருகின்றார்கள் இல்லையே! என்ன செய்யலாம்?**

மதுராங்கன், பணத்தை கணக்காகக் கொடுங்கள், அவர்கள் கணக்குவிட மாட்டார்கள்! இந்நாட்களில் ஐந்து, ஆறு ரூபா மீதிப்பணமாக இருந்தால்கூட கொடுக்காத பல நடத்துனர்கள் இருக்கின்றார்கள். ஐந்து, ஆறு ரூபாவே மீதிப்பணமாகக் கிடைப்பதில்லை என்றால்இரண்டு, மூன்று ரூபாக்களைப் பற்றிப் பேசவேண்டிய அவசியமில்லை! -இதுகுறித்து, எவரும் அலட்டிக் கொள்வதாகவும் தெரியவில்லை. அந்தளவிற்கு சில்லறைப் காசினுடைய புழக்கம் குறைந்துவிட்டதா அல்லது சில்லறைப் புழக்கத்தை வேண்டுமென்றே குறைத்து விட்டார்களா என ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது! இப்பிரச்சினையைத் தீர்க்க சில வழிமுறைகள் உண்டு. ஒன்று. மேலே குறிப்பிட்டதுபோல பயணத்திற்குச் செல்லும்போது சில்லறைப் பணத்தை வைத்திருப்பதன் ஊடாக உங்கள் பணத்தை இழக்காதிருக்கலாம். அடுத்து, கோவில்களுக்கும் ஆலயங்களுக்கும் பள்ளிகளுக்கும் விகாரைகளுக்கும் பொறுப்பானவர்கள் உண்டியல்களை அடிக்கடி திறந்து சில்லறைக் காசுகளை இ.போ.சபையினருக்கும் தனியார் போக்குவரத்துச் சபையினருக்கும் கொடுத்தால் மீதிப்பணப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வை உடனடியாகக் கண்டுவிடலாம். இவ்வுண்டியல்களை அடிக்கடி திறந்தால் மீதிப்பணப் பிரச்சினைக்கும் விடிவு கிடைக்கும், உண்டியல்கள் உடைக்கப்படும் பிரச்சினைக்கும் முடிவு கிட்டும்! கோயில், ஆலய, பள்ளி, விகாரை நிர்வாகங்கள் இதனைக் கவனித்தால் பயணிகள் மீதிப்பணம் பெற வாய்ப்புண்டு! இன்னும், மத்திய அரசு ஐந்நூறு, ஆயிரம், ஐயாயிரம் தாழ்களை மட்டும் அடிக்கடி அடித்துக்கொண்டிருக்காமல் ஒன்று, இரண்டு, ஐந்து ரூபா குற்றிகளைக் கொஞ்சம் தாராளமாக வெளியிட்டால் இப்பிரச்சினை தீர்ந்துபோக மேலும் சாத்தியப்பாடு உண்டு. ஆனால், மீதிப்பணம் கொடுக்காமல் ருசி கண்டவர்கள் சில்லறை இருந்தாலும் இல்லாததுபோலதான் நடந்து கொள்வார்கள், நடித்தும் கொள்வார்கள்!

*(மல்லிகா, முல்லைத்தீவு)*

**வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்கின்றார்கள். வாய்விட்டுச் சிரிக்க ஒரு சம்பவம் சொல்லுங்களேன்.**

மல்லிகா, 'ரீ' குடிக்க ஒருவன் கடைக்குப் போகின்றான். அவன் பட்ட பாட்டைப் பாருங்கள்! கடைக்காரன் கேட்கிறான், 'ரீ' குடிக்கப்போனவர் பதில் சொல்கிறான்: கேள்வியும் பதிலும் மாறிமாறித் தொடர்கிறது. இறுதிவரை படித்துப் பாருங்கள். வாய்விட்டுச் சிரிக்கின்றீர்களோ தெரியாது; நினைத்து நினைத்துச் சிரிப்பீர்கள்.

**கடைக்காரன்:** என்ன குடிக்கப்போறீங்க? 'ரீ'யா அல்லது 'கோப்பி'யா?
**மற்றையவன்:** 'ரீ'.
**கடைக்காரன்:** 'சிலோன் ரீ'யா? அல்லது 'கிறீன் ரீ'யா?
**மற்றையவன்:** 'சிலோன் ரீ'.
**கடைக்காரன்:** கடும் சாயமா? அல்லது 'லைற்'றாவா?
**மற்றையவன்:** 'லைற்'றா!
**கடைக்காரன்:** 'மில்'போட்டா? போடாமலா?
**மற்றையவன்:** 'மில்'போட்டு!
**கடைக்காரன்:** 'ரின்' பாலா, பசுப்பாலா அல்லது 'அங்கர்' பாலா?
**மற்றையவன்:** பசுப்பால் 'பிலிஸ்'!
**கடைக்காரன்:** 'சுகரு'டனா? சும்மாவா?
**மற்றையவன்:** 'சுகரு'டன்!
**கடைக்காரன்:** வெள்ளைச் 'சுகறா'? 'பிறவுண் சுகறா'?
**மற்றையவன்:** ஏதாவது ஒரு 'சுகர்'!
**கடைக்காரன்:** ஒரு 'ஸ்பூணா இரண்டா?
**மற்றையவன்:** எனக்கு 'ரீ' வேண்டாம் ஐயா, ஒரு 'கிளாஸ்' தண்ணீரே போதும்!
**கடைக்காரன்:** 'மினரல் வேட்ட'ரா? 'நோமல் வோட்ட'ரா?
**மற்றையவன்:** 'மினரல் வோட்டர்'!
**கடைக்காரன்:** 'அமெரிக்கன் பிறான்டா' அல்லது 'சிறிலங்க'னா?
**மற்றையவன்:** தயவுசெய்து மேற்சொன்வற்றை எல்லாம் கெட்ட கனவாகக் கருதி என்னை விட்டுவிடுங்கள்! பிச்சை வேண்டாம் தாயே நாயைப்பிடி! என்றானாம்.

*(மாவளன், முல்லைத்தீவு)*

**இப்போது, கடவுள்பயம் இருக்கின்றது என நீங்கள் நினைக்கின்றீர்களா?**

மாவளன், கடவுள்பயம் இருக்கின்றதோ இல்லையோ தெரியவில்லை! இப்போது, கண்காணிப்புக் கமறாவுக்குப் பயம் இருக்கின்றது! அதானல்தான், ஒருமுறை எழுதினேன்: "இப்போதெல்லாம் கடவுள் பயத்தை விடக் கண்காணிப்புக் 'கமறா'வுக்கே அதிக பயம்!" என்று! நமது அனுமானம் சரி தானே?

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு SMS, Viber அல்லது WhatsAppக்கோ அனுப்பிவைக்கலாம்.**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

## பங்குகளில் மறைக்கல்வி வார நிகழ்வுகள்

**மக்களின் கிறிஸ்தவ வாழ்வு முன்னேற்றத்திற்கு மறைக்கல்வியின் பங்களிப்பை வலியுறுத்தும் முகமாக 09.09.2018 தொடக்கம் 16.09.2018 வரை நாடளாவிய ரீதியில் திரு அவையினால் மறைக்கல்வி வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.**

### யாழ் மரியன்னை பேராலயம்

தேசிய மறைக்கல்வி வாரத்தினை முன்னிட்டு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் மறைக்கல்வி மாணவர்களுக்கு சிறப்பு நற்கருணை வழி- பாடு, சிரமதானம் போன்ற பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதன் நிறைவு நிகழ்வாக 16.09.2018 மறைக்கல்வி விழா பங்குத்தந்தை R.C.X.நேசராஜா அடிகளார் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக மறைக்கல்வி நடுநிலை இயக்குனர் அருட்பணி அ.பெ.பென்ற் அடிகளார் கலந்து சிறப்பித்தார். தேசியம், மறைமாவட்டம் மற்றும் பங்கு மட்டங்களில் பல்வேறு சாதனைகளைப் புரிந்த மறை ஆசிரியர்களும் மறைக்கல்வி மாணவர்களும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.





### மணியந்தோட்டம்

யாழ் மறை மாவட்டத்தில் மணி யந்தோட்டப் பங்கில் இந்' நிகழ்வு சிறப்பாக ஒழுங்கமைக்கப் பட்டது. மறைக்கல்வி மாணவர்களிடையே பிரிவுகள் ரீதியாக போட்டிகள் நடைபெற்றன. மறை ஆசிரியர்களான திரு.பங்கிராஸ், திரு. இ.ம.ஜெயசீலன் ஆகியோரது வழிகாட்டலில் மாணவர்களுக்கான பாசறை நிகழ்வு "மகிழ்ச்சிஸயான வாழ்வே முதிர்ச்சியான கிறிஸ்தவ வாழ்விற்கு அடையாளம்" என்ற மையப்பொருளில் ஒழுங்கமைக்கப் பட்டது.

ஆவியின் தரிசனம் என்னும் குறும்படமும் காட்சிப்படுத்தப்பட்டது.

நிறைவுநாள் திருப்பலி யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்பணி அ.பெ.பெனட் அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. மாலை கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. பங்குத்தந்தை எஸ். எம்.செபஸ்ரியன் அமதி அடிகளாரின் நெறிப்படுத்தலில் மேற்படி மறைக்கல்வி வார நிகழ்வுகள் நடைபெற்றன.

### பண்டியன்தாழ்வு

பண்டியன்தாழ்வு பங்கில் மறைக் கல்வி வார நிகழ்வுகள் பங்குத்தந்தை அருட்பணி யே.யே.மவுலிஸ் அடிகளா- ரின் வழிப்படுத்தலில் நடைபெற்றன. நிறைவு நாள் திருப் பலி அருட்பணி ஸ்ரனி அன்ரனி அமதி அடிகளாரின் தலைமையில் நடை- டபெற் றது.

மறையாசிரியர்கள் மற்றும் மறைக் கல்வி மாணவர்கள் மிகுந்த அக்கறையோடு இவ்வாரத்தை கடைப்பிடித்ததுடன் பல்வேறு கலை நிகழ்வுகளும் நிறைவு நாளில் நடைபெற்றது. மறைக் கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்பணி அ.பெ.பெனட் அடிக- ளாரும் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஆசி வழங்கினார்.

### மாசீசன்கூடல்

மாசீசன்கூடல் பங்கிலுள்ள உள்ள ஒவ்வொரு ஆலயத்திலும் தேசிய மறைக் கல்வி தினத்தை முன்னிட்டு திருப்பலி வழிபாடுகள் மற்றும் மறைக் கல்வி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகள் என்பன நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்பணி டினேஷன் அடிக- ளாரின் வழிகாட்டலில் நடைபெற்ற இந் நிகழ்வுகளில் இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி யேசுரட்ணம் அடிகளாரும், இளவாலை திருக்குடும்ப கன்னியர் சபை அருட் சகோதரி லூட்ஸ் மேரி அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

### சில்லாலை

சில்லாலைப் பங்கில் மறைக்கல்வி வார நிகழ்வுகள் பங்குத்தந்தை அருட்பணி அ.அகஸ்ரின் அடிகளார் தலைமையில் ஆரம்பமாகி தினமும் பல்வேறு தொனிப் பொருள்களில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் நிறை- வுநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கலை நிகழ்வுகளும் நடைபெற்றது.

# எமது குடும்பங்களில் வாசிப்புப் பழக்கத்தை நேசிக்க ஊக்குவிக்க வேண்டும்



அருட்பணி சிங்கராயர் ஸ்ரீவன் (CMF)

வாசிப்பு என்பது எழுதப்பட்ட உரையின் எழுத்துக்களைப் பார்த்தும் சொற்களைப் புரிந்து கொண்டும் அதில் கூறப்பட்ட கருத்தை உணர்ந்து கொள்ளுவதுமாகும். எழுத்தறிவின் அடிப்படைக் கூறாக வாசிப்பு தனித்துவம் பெறுவதுடன் நாளாந்த வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது என்பதை உணர்த்துகின்றது.

வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்துகிறது. மனிதன் பூரணத்துவம் பெற்று ஆளுமை விருத்தி அடைந்தால் மட்டுமே நல்ல மனிதனாக சமூகத்தில் வாழமுடியும். மனிதன் மனிதனாக வாழ புத்தகங்கள் உதவியிருக்கின்றன. ஆளுமைமிக்க மனிதர்களாக உருவாக புத்தகங்களை விருப்புடன் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். வாசிப்புத் திறனை வளர்ப்பதில் அனைவரும் அதீத அக்கறை கொள்ளவேண்டும். அத்துடன் புத்தகங்களை வாசிப்பதால் சிறுபிள்ளைகளின் மொழித்திறன், கேட்டல்திறன் என்பன அதிகரிப்பதோடு பொது அறிவு வளர்ச்சியும், பல்வேறுபட்ட பாரம்பரியங்களையும், கலாசாரங்களையும் அறியவும் முடிகிறது. அத்தோடு தன்னம்பிக்கை, ஆளுமைவிருத்தி, ஞாபகசக்தி அதிகரிப்பு, கிரகித்தல், கற்பனைத்திறன் என்பனவும் அதிகரிக்கப்பட்டு அறிவு வளம் பெறுகிறது. தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகத்தோடு மண்டியிட்டு முன்னேறிக் கொண்டிருக்கும் உலகியலின் அன்றாட நிகழ்வுகளிலிருந்தும் ஆய்வுகள் வரையும் பல்வேறு தகவல்களை அறியவும், அறிவை விருத்தி செய்யவும் நல்ல பண்புகளை வளர்த்து உன்னதமான மனிதனாக மாற்றம் கொள்ளவும், தன்னம்பிக்கையையும், உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தன்னார்வத்தோடு பெற்றுக் கொள்ளவும் நூல்கள், பத்திரிக்கைகள், சஞ்சிகைகள் அளப்பரிய பங்கை ஆற்றி வருகின்றன.

புத்தகங்கள் தாயாய், குருவாய், நண்பனாய் தன்னைத் தாங்கும் மனிதக் கரங்களோடு உறவாடுகின்றன. சிறந்த புத்தகங்களைப் படிப்பது கடந்த நூற்றாண்டுகளில் வாழ்ந்த மிகச்சிறந்த மனிதர்களுடன் பேசுவதற்கு சமமானது என்று பெரியோர்கள் கூறியுள்ளனர். பல்வேறுபட்ட நாகரிகங்களின் நுகர்வில் மகிழ்ந்திருக்கும் மனிதனின் இன்றைய தேவையாக ஆடம்பரமே உள்ளது. ஆடம்பரத் தேவையினை நிறைவு செய்வதற்காக அறிவியல் சாதனங்களையும், பொன்பொருள்களையும் கொள்வனவு செய்வோர் புத்தகங்களை மறந்து விடுகின்றனர். இதனால் எமது சந்ததி வாசிக்கும் பழக்கத்தை குறைத்து விட்டது.
புத்தகங்ிகளால் கிடைக்கும் அரிய பயன்களை அனுபவிக்கும் நிலையும் அருகிவிட்டது. புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கும் நாம் செலவிடும் பணமானது எமக்கும் பிள்ளைகளுக்கும் மட்டுமல்லாது எமது சந்ததிக்கே பெரும் மூலதனமாகவும் அதற்கான அடித்தளமாகவும் உள்ளது என்பதை மறந்தே விடுகின்றனர்.
வாசிப்பின் செயற்பாட்டை நோக்கும் போது கண்ணுக்கும் வாய்க்கும் ஆன ஒத்துழைப்புத் தேவைப்படுகிறது.
அதாவது வரிவடிவத்திலுள்ள சொற்களை ஒலி வடிவமாக மாற்றி உச்சரிக்கும் உறுப்புக்களும், சொற்களைப் பார்க்கும் கண்களும் ஒத்திசையும் போது தான் வாசிப்புச் செயற்பாடுகள் சரியான முறையில் இடம்பெறும். ஆகவே வாசிப்பானது காணல், உச்சரித்தல், பொருளுணர்தல் என்ற மூவகைக் கூறுகளைத் தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது. நல்ல வாசிப்புக்கு எழுத்துக்களின் ஆளுமை முதற்கூறாக அமைந்துவிட்டால் கருத்துணர்வு என்பது எந்தவிதமான பிரச்சினைகளுமின்றித் தொடர்ச்சித் தன்மையோடு அமையும்.

**பெற்றோரின் வகிபாகம்**

பெற்றோர் முதலில் புத்தகங்களை வாங்கவும் வாசிக்கவும் விருப்புடன் பழகவேண்டும். குழந்தை கருவறையில் இருக்கும் போதே தாய் அறிவு சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த புத்தகங்களைப் படிக்க வேண்டும். வீடுகள் பெரிதோ சிறிதோ நூலகம் ஒன்று கட்டாயமாக உருவாக்கப்பட வேண்டியது பெற்றோரது கட்டாய கடமையாகும். நல்ல புத்தகங்களை கொள்வனவு செய்து வீட்டு நூலகத்தை அழகுறச் செய்ய வேண்டும். ஒரு நாட்டுக்கு நூலகம் முதுகெலும்பாக உறுதி பெறுவது போல ஒவ்வொரு வீட்டுக்கும் நூலகம் உறுதி பெற வேண்டும்.

இங்கு பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதில் பெற்றோர்களின் வகிபாகம் முக்கியத்துவம் பெறுகிறது. பிள்ளைகளின் கற்றல் சார் நடவடிக்கைகள் வீட்டில் இருந்தே ஆரம்பிக்கப்படுவதால் பெற்றோர் தமது பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்வதற்கு பல்வேறு வழிகளிலும் உதவிபுரிய முடியும். குழந்தைகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடியவற்றை தெரிவு செய்து அதனை வாசிப்பதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அழகிய வர்ணச்சித்திரங்கள் உள்ள பெரிய எழுத்துக்களை உடைய புத்தகங்களை வாங்கிக் கொடுப்பதன் மூலம் குழந்தைகளின் வாசிப்பு ஆர்வத்தை அதிகப்படுத்தலாம். அன்றாடம் வீட்டுப் பாவனைக்கென கொள்வனவு செய்யும் பொருள்களின் பொதியிடலில் உள்ள விடங்களை வாசிப்பதற்கு பிள்ளைகளை ஊக்கப்படுத்த முடியும். ஒரு பிள்ளையின் ஆளுமை, தன்னம்பிக்கை போன்றவற்றை தீர்மானிப்பதில் வாசிப்பு முக்கிய பங்காற்றுகிறது. நாளாந்தம் தமக்கு விருப்பமான ஏதாவதொன்றை பிள்ளைகள் வாசிப்பதைப் பெற்றோர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். பிள்ளைகளுக்கு ஏற்றதான வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டக் கூடிய பொருத்தமான சூழல் வீட்டில் உள்ளதா? என்பதை பெற்றோர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். வாசிப்புக்கு பொருத்தமான சூழல் என்பதன் வரையறை அமைதியான, போதிய காற்றோட்டம் மற்றும் வெளிச்சத்தைக் கொண்ட சூழமைவைக் குறித்து நிற்கிறது.

அறிவு கொண்ட சமூகத்தை உருவாக்கவும், வாழ்வியலை சீர் செய்யவும் நூல்களை விரும்பி வாசிக்கப் பழக்க வேண்டும். எழுத்தாளர்கள் சிறுவர்களின் அறிவுக்கு விருந்தான சிறுவர் இலக்கியங்களைப் படைக்க வேண்டும். சிறுவர்களுக்கு பரிசில்கள் கொடுக்கும் போது புத்தகங்களை கொடுப்பதே நன்று.

சிறுவர்களோ, பெரியவர்களோ எவராயி-னும் பயணங்களின் போது பயன்தரக் கூடிய அறிவுப் புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்திற்கு உட்பட வேண்டும். அலைபேசிப் பயன்பாடு சிறுவர்களின் புத்தகங்கள் மீதான ஈர்ப்பை தம்வசம் திருப்பியுள்ளன. இந்த நிலை மாறி புத்தகங்களை வழிகாட்டியாக, துணையாக, நட்பாக, அறிவுப் பொக்கிசமாக ஒவ்வொருவரும் கொள்ள வேண்டும்.

ஆபிரகாம் லிங்கன் வறுமை காரணமாக புத்தகம் இரவல் வாங்கிப் படித்தவர். கென்னடி நெப்போலியன், அப்துல்கலாம், ரைட் சகோதரர்கள் போன்றோர் வாசிப்பதையே நோக்கமாகக் கொண்டு புத்தகங்களோடு உறவாடியவர்கள். அப்துல்கலாம் விட்டுச் சென்ற சொத்தாக பெறுமதி கூடியதும், எண்ணிக்கையில் அதிகமாயும் 2500 புத்தகங்களே உள்ளன.

நூலகத்திற்கு பிள்ளைகளை அழைத்து செல்வதன் மூலம் அவர்கள் சுதந்திரமாகவும், தமக்கு விருப்பமான புத்தகங்களை தெரிவு செய்து வாசிப்பதற்குரிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்கமுடியும். இன்று நூலகங்களில் சிறுவர்களுக்கென கதை சொல்லும் நேரம், கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இவை சிறுவர்களுக்கு சிறந்த பொழுதுபோக்கு அம்சமாக அமைந்து விடுகின்றன. நூலகங்களில் தமக்கு பொருத்தமானவற்றை சதந்திரமாக தெரிவு செய்து வாசிக்கும் சந்தர்ப்பம் மாணவர்களுக்குக் கிடைத்தாலும் அவர்களின் வயதிற்கேறப பொருத்தமான நூல்களை அல்லது பொருத்தமான தலைப்புக்களைத் தெரிவு செய்து வாசிப்பதற்கு பெற்றோர் அவர்களை வழிப்படுத்த வேண்டும். அதே போன்று பிள்ளைகள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை வளப்படுத்துவதற்கு வாசகர் வட்டத்தை தமது பங்குகளில் அல்லது பாடசாலையில் காணப்படும் நூலகங்களில் ஆரம்பித்தல் சிறப்பான அம்சமாகும். ஒவ்வொரு நாளும் பிள்ளைகளுக்கு வாசிப்பதற்குரிய நேரகாலத்தை இனங்கண்டு கொண்டு அவர்களை வழிப்படுத்த வேண்டும். வாசிப்பு என்பது ஒரு புத்தகத்துடன் பிள்ளைகள் இருப்பது என்ற செயல்நிலையோடு ஆரம்பிக்கும் விடயமல்ல. அது நாளாந்த வாழ்வின் பகுதியாக இருக்கவேண்டும்.

பிள்ளைகள் தமக்கு விருப்பமான புத்தகங்களை மீண்டும் வாசிப்பதற்குத் தூண்டுவதன் மூலம் குழந்தைகளை வாசிப்பின் நேசிப்புடைய வா்சகர்களாக மாற்றியமைத்துக் கொள்ளலாம். முதல் வாசிப்பில் தவறவிடப்பட்ட விடயங்களை அறிந்து கொள்ள இந்தச் செயன்முறை வழிவகுக்கும். பிள்ளைகளைப் பொறுத்த வரையில் அவர்களின் முதலாவது ஆசிரியராகத் திகழ்வோர் பெற்றோர்களே ஆவர்.

பிள்ளைகளின் பிறந்த நாள் மற்றும் ஏனைய கொண்டாட்ட நிகழ்வுகளின் போது அவர்களுக்குப் பொருத்தமான புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கும் நடைமுறையைப் பழக்கப் படுத்திக் கொள்ளுங்கள். மேலும் பிள்ளைகளுக்கு விருப்பமானதும், பொருத்தமானதுமான கதைகளை தெரிவு செய்து கொடுத்து அவர்களை வாசிக்கத்தூண்டுங்கள். தொடர்கதைகளை வாசிப்பதன் மூலம் வாசிப்பு ஆர்வம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே வாசிப்பதற்குரிய குறிப்பிட்ட நேரத்தை ஒவ்வொரு நாளும் அல்லது ஒவ்வொரு வாரமும் ஒதுக்குவதன் மூலம் பிள்ளைகளின் வாசிப்பு ஆர்வத்தை தூண்ட முடியும்.

"ஒரு கோடி ரூபா கையில் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?" என்ற கேள்விக்கு "ஒரு நூலகம் கட்டுவேன்" என்றார் மகாத்மாகாந்தி. "தனிமைத் தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள்?" என்றதற்கு "புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவிட்டு மறைவேன்" என்று பதிலளித்தார் ஜவஹர்லால் நேரு.



23 ஆண்டு காலம் நூலகத்திலேயே தன் வாழ்க்கையைப் புதைத்து நாற்பதாயிரம் நூல்களைப் படித்து உலக மானிடத்திற்கு மூலதனம் தந்தவர் மாக்சிசத்தின் தந்தை காள்மாக்ஸ். வெற்றியின் சிகரத்தை அடைந்தவர்கள் தங்களுடைய வாழ்வில் பல நல்ல நூல்களுடன் பயணம் மேற்கொண்டு, பயனை அடைந்து அவற்றை நண்பனாக்கிக் கொண்டார்கள். நாமும் பல நூல்களைப் படித்து படைப்பாக்கம் செய்வோம். **சாதாரண மனிதன் புத்தகங்களோடு இருப்பான். சாதனை மனிதனோ புத்தகத்தில் இருப்பான்.** இவற்றில் நாம் எந்த வகை என்பதை சிந்திப்போம். உலகில் அதிகூடிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட முதலாவது நூலாக நமது பைபிள் (திருவிவிலியம்) விளங்குகிறது. இரண்டாவது இடத்தில் உலகப் பொதுமறை என அழைக்கப்படும் வான்புகழ் வள்ளுவனின் திருக்குறள் விளங்குகிறது.

**நல்லவற்றைக் கற்று**
**நலம்பெற வாழ்வோம்.**

### எப்போதும் கற்றுக்கொள்ளும் நிலையில் உங்கள் மனதை வைத்திருங்கள்

மிகப் பிரபலமான விஞ்ஞானி அல்பேட் ஜன்ஸ்டீனிடம் முட்டாள் தனத்திற்கு விளக்கம் கேட்டபோது "ஒரே வேலையை திரும்பத் திரும்ப ஒரே மாதிரிச் செய்துவிட்டு வித்தியாசமான பதிலை எதிர்பார்ப்பதற்கு பெயர் தான் முட்டாள்தனம்" என்றாராம். குழந்தைகள் எப்போதும் ஆனந்தமாக இருப்பதற்கு அவர்களின் சுத்தமான மனம் மட்டும் காரணம் அல்ல. அவர்கள் எதையாவது கற்றுக்கொண்டு, மனதை புதுப்பித்துக்கொண்டு இருப்பது தான் காரணம். இது பெரியவர்களுக்கும் பொருந்தும். மனநலம் இருந்தால் உடல் நலமும் இலவச இணைப்பாக வந்துவிடும். கற்றல் ஒரு மனிதனை பலவிதங்களில் வளரச் செய்கிறது.



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

### ஊர்காவற்துறையில் முதல் மகா ஞானொடுக்கம்

ஆயர் செமேரியா அவர்கள் யாழ்ப்பாணத் திருத்தூது மாவட்டத்தின் வழிவரும் இணை ஆயராக ஆயர் புனித யூஜின் டி மசனட்டால் அருட்பொழிவு செய்யப்பட்ட 1857ம் ஆண்டு ஏப்பரல் 17ம் திகதி காலியில் வந்திறங்கிய பின் யாழ்ப்பாணம் வந்தபோது ஊர்காவற் துறை மறைத்தளம் மிகவும் மோசமான நிலையிலிருந்தது. அங்குள்ள புனித அந்தோனியார் ஆலயம், புனித மரியாள் ஆலயம் ஆகியவற்றுக்கான வருமானங் கள் மற்றும் அசையும் சொத்துக்கள் சம்பந்தமாகப் பல மோசமான முரண்பாடுக ளும், மோதல்களும் இடம்பெற்று வந்தன. சாதி முரண்பாடுகள் இரு ஆலயச் சமூகங் களையும் ஒன்றுடன் ஒன்று மூர்கத்தன மாக மோத வைத்தன. ஐரோப்பாவில் இருந்து வந்த மறைப்பணியாளருக்கு இந்திய உபகண்டத்தில் வாழும் மக்களின் மனநிலைகளும், அணுகுமறைகளும் புதி தாகவேயிருந்தன. குறிப்பாக இங்கு ஊர் காவற்துறையில் இக்காலத்தில் வாழ்ந்து வந்த கத்தோலிக்கர் கிளர்ச்சி செய்பவர் களாக, நம்ப முடியாதவர்களாக, தாம் சார்ந்துள்ள சமயத்தில் ஈடுபாடில்லாத வர்களாக, திருத்த முடியாதவர்களாக, தமது நேரத்தை சண்டைகளிலும் தேவை யற்ற வாதப்பிரதிவாதங்களிலும் ஈடுபடு பவர்கள் என்பது இந்நாட்களில் இங்கு பணியாற்ற வந்த மறைப்பணியாளர்களது மதிப்பீடாகும். சிலவருடங்களுக்கு முன்னர் இம்மக்கள்தான் ஒரு பிரிவினைக் குருவை அடாத்தாகக்கொண்டு வந்து தம்மத்தி யில் மறைபணியாற்ற ஏற்பாடு செய்திருந் தார்கள். (6 வருடங்களுக்கு முன்னர் இங்குள்ள மக்களுள் ஒரு சாரார் பணி நீக் கம் செய்யப்பட்ட கோவா பிரிவினை வாதக் குருவாகிய பிரான்செஸ்கோ ஜியோ வான்னி என்பவரை கொண்டு வந்து இங்கே அமர்த்த முயன்றது முன்னர் குறிப் பிடப்பட்டிருந்தமையை வாசகர்கள் அறி வர்) தற்போதும் இவர்களது மனப்போக்கு முறைப்படியான கத்தோலிக்க திருச்சபை யின் ஆட்சிப்பீடத்திற்குப் பணியாது பிரி வினைக் குழுவாகச் செல்வது இவர்க ளுக்குப் பெரிய விடயமாகத் தெரிய வில்லை.

இங்கு பணியாற்றிக்கொண்டிருந்த பங்குத் திருப்பணியாளரின் அதிகாரத்தை உதாசீனம் செய்யக்கூடிய இம்மக்களின் செயற்பாடுகள் எவ்வளவுக்கு மோசமான-தாகவும், இடறல் வருவிக்கக்கூடியதாகவும் இருந்ததென்றால் அரச அதிகாரிகளின் தலையீடு தவிர்க்க முடியாததொன்றான் றாகிவிட்டது. இங்குபணியாற்றிக்கொண்டி ருந்த லெபெஸ்கோ (Lebscou) அடிகளின் பொறுமையையும், சகிப்புத்தன்மையை யும் உதாசீனம் செய்தவர்களாக இவர்கள் தொடர்ந்து பிரச்சினை கொடுத்துக் கொண்டே இருந்தனர். இவர்கள் தாங் கள் நினைத்த இடங்களில் எல்லாம் பீடங்களை கட்டியெழுப்பியது மட்டுமன்றி ஒரு புதிய கோயிலையும் கட்டத் தலைப் பட்டனர். குறிப்பாக புனித மரியாள் ஆல யத்தில் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் இப்படியான மோசமான செயல்களில் ஈடுபடலாயினர். ஒரு பிரிவினை ஒன்று உருவாகுவதற்கு ஏதுவான ஒரு சூழ்நிலை உருவாகிக்கொண்டிருந்தது எனலாம்.

தவறானதும், பொய்யானதுமான எண்ணாங்களால் வழிநடத்தப்பட்டு வந்த இம்மக்களை தமது அன்பான, இரக்க மான அனுகுமுறைகளினால் சரியான பாதைக்கு கொண்டுவர முயன்ற ஆயர் செமேரியாவின் முயற்சிகள் பல நாட்க ளாக எதுவித பயனையும் தரவில்லை. அவ்வளவுக்கு இவர்களது பிடிவாதம் ஆயரின் முயற்சிகளை எல்லாம் வீணாக் கியது. அமலமரித்தியாகிகள் சபையி-னர் யாழ் மண்ணில் கால்பதித்து பணி யில் ஈடுபடத் தொடங்கிய காலத்தில் இருந்து கத்தோலிக்கரது வாழ்வில் ஒரு புத்தாக்கம் ஏற்பட வேண்டிய தேவையை ஆயர் செமேரியா உணர்ந்திருந்தார். இனியும் காலம் தாழ்த்த விரும்பாத ஆயர் அவர்கள் பிரான்சில் பணியாற்றிய போது குறிப்பாக கோர்ச்சிக்காத் தீவில் நிறை வான பலன்களைத் தந்த வழிமுறையை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்தார். இறைவனில் முழு நம்பிக்கை வைத்து தமது துறவற சபையின் பாதுகாவலியா-கிய அமலமரியின் பரிந்துரையிலும் உறுதியாக நம்பியவராக அவரது வார்த்தைகளில் கூறுவதாயின் பசாசை அதன் கோட்டையிலேயே வைத்துத் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தார். இது இங்கு இவரது முதல் முயற்சியாக, மனித கணிப்பின்படி நோக்கும் போது முழுமையாகத் தோல்வியில் முடியும் திட்டமாகத் தென்பட்டாலும் ஆயரவர்கள் ஊர்காவற்துறை மறைத்தளத்தைத் தமது முதல் போர்க்களமாகத் தேர்ந்தெடுத்தார். 1857ம் ஆண்டு வியாகுல அன்னையின் திருநாளன்று (செப்ரெம்பர் 14ம் திகதி) சொர்ணாவெல் அ.ம.தி. பொன்ஜீன் அ.ம.தி. ஆகிய இரு குருக்களுடனும் ஆயர் ஊர்காவற்துறை சென்றார். இம்

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

மகா ஞானொடுக்கத்தின் தொடக்க நாட்கள் வேதனையளிப்பவையாகவும், விரக்தியடைய வைப்பதாகவும் அமைந் திருந்தமை மகா ஞானொடுக்கத் தொடக்க நாள் வியாகுல அன்னையின் திரு-நாளாக இருந்தமைக்கு ஒரு விதத்தில் பொருத்தமானதாகவேயிருந்ததெனலாம். எல்லாவித ஒழுங்கீனங்களிலும் நன்கு ஊறியிருந்த இம்மக்கள் தமது மோச மான உறக்க மயக்கத்திலிருத்து விழித் தெழுவார்கள் என்பதில் நம்பிக்கை இருக்கவேயில்லை. ஆயர் உட்பட மகா ஞானொடுக்கத்தை நடத்த வந்த திருப் பணியாளர்களை எதுவித அக்கறையு மின்றி நோக்கினர் சிலர். மற்றை யோர் இவர்களை வெறுப்புடன் இவர் கள் எங்களை என்ன செய்து விடப் போகிறார்கள் என்று ஏளனத்துடனும் பார்த்தனர்.

எனினும் முதல் நாட்களில் காலையிலும் மாலையிலும் இடம் பெற்ற மறையுரைகளுக்கு மக்களின் பொதுவான வெதுவெதுப்பான நிலைப்பாட்டுக்கு மத்தி யிலும் மாதா கூட்டத்தைச் சேர்ந்த பெண் கள் ஒரளவுக்கு வந்திருந்தனர். ஆயினும் இந்நாட்களில் வந்திருந்த 10, 12 ஆண்கள் என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்கு வந்தார்களேயன்றி இதனால் தமது வாழ்க்கையில் ஏதாவது மாற்றத்தை அல்லது முன்னேற்றத்தைக் கொண்டு வர லாம் என்று வரவில்லை. மக்களுடைய பொதுவான ஈடுபாடும், அக்கறையுமில்லாத மனப்பான்மையைப்பார்த்து பல்வேறு காரணங்கள், சூழ்நிலைகளால் இதுவரை கோவிலுக்கு வராதிருப்பவர்களது இல்லங் களைத் தரிசிப்பதற்கு மறைப்பணியாளர் கள் திட்டமிட்டனர். எனவே ஒவ்வொரு நாட்காலையிலும் கடும் வெயில் தடையாக இருந்தபோதும் வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு சென்று இம்மறைப்பணியார்கள் மக்களை ஆழ்ந்த உறக்க மயக்கத்திலிருந்து தட்டி யெழுப்பி, கிறிஸ்தவ நம்பிக்கையின் உண்மைகளை நினைவுபடுத்தி மகா ஞானொடுக்க மறையுரைகளுக்கு வர ஊக்குவித்தனர். மறைப்பணியாளர் வீடுக ளுக்குச் சென்றபோது அவர்கள் மக்களுக் குக் காட்டிய பரிவு காரணமாகச் சிலர் வந்திருந்தாலும் கணிசமானோர் ஏதோ தட்டிக்கழிக்கும் பதிலையே வழங்கினர். பலருடைய பதில், இதுவிடயமாகப் "பின் னர் சந்தர்ப்பம் வரும் போது பார்க்கலாம்" என்பதாக இருந்தது. சிலர் மறைப்பணி யாளர்களைக் கோபத்துடன் திட்டித்திருப்பி யனுப்பிய சந்தர்ப்பங்களும் இருந்தன. தொடக்கத்திலிருந்தே மறைப்பணியாளர் ஒப்புரவாக்கல், உறவுகளைச் சீர்செய்தல் ஆகியவற்றின்பால் மக்களின் கவனத்தை ஈர்க்க முயன்றனர். ஆனால் எல்லா முயற்சிகளும் மக்களின் கடும் எதிர்ப்பி னால் வீணாயின என்றுதான் சொல்ல வேண்டும். மனம் சோராத மறைப்பணி யாளர் மிகவும் பொறுமையுடன், செபத் தில் நம்பிக்கை வைத்தவர்களாக, காலம் நேரம் சரியாக வந்து அமைந்தாலும், அமையாவிட்டாலும் போதித்துக் கொண்டேயிருந்தனர். (தொடரும்...)

# நண்பனுக்கு ஓர் மடல்



*அன்பு நண்பா,*

சென்ற வாரம் உனது எண்ணங்களை பகிர கிடைத்த சந்தர்ப்பத்தில் பல விடயங்களை அறிந்து கொண்டேன். எல்லா விடயங்களிலும் இளையோருக்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட பின்நிற்கிறார்கள் என்று கூறியது மன நெருடலை தருகிறது. இளையோரின் சக்தியை நல்வழியில் பயன்படுத்தாவிட்டால் எமது ஆன்மீக வாழ்நாள் பயனற்று விடும் என்பது உண்மையே.

ஒருவர் மற்றவர் மீது குறைகளை கூறியே காலத்தை கடத்துவதை விட தம்மை தாமே மீட்டுப்பார்க்க எமது வழிபாடுகளில் பங்கேற்பதும் நாம் ஓர் கிறிஸ்து அவன், அவள் என்பதனையும் அடையாள கிறிஸ்தவர்களாக இராது எம்மால் செயற்பட முன்வருவதாலே ஆரோக்கியமான ஆன்மீகப்பயணமாக அமையலாம்.

அன்று இயேசு பெருமான் தன் சீடர்களை பலதரப்பட்டவர்களாக பட்டம், பதவி, குலம் நேத்திரங்களுக்கு அப்பால் "என் பின்னே வாருங்கள்" என்ற அழைப்புக்கு ஒன்றினைத்தது போல ஒவ்வொரு பங்கிலும் பெயருக்கு இளையோர் குழுமங்களாக இராது, செயற்பாட்டில் இணையும் இளையோரை உருவாக்க வேண்டியதும் உண்மை சீடர்களாக மாற்றம் பெறும் நற்செயல்களால் இளையோர் சக்தி வெளிப்படுத்த சீடத்துவ மனநிலையில் முன்வருதலே இன்றைய முக்கிய தேவையா-கும். இதனை முன் எடுப்பதில் தான் ஆன்மீக வழிகாட்டல் இறைபாதையை செப்பனிட நல்ல சந்தர்ப்பமாக அமையும். இதை ஏற்றுக்கொள்ளும் இளையோர் அணிகளே சீடத்துவத்தை வெளிப்படுத்தும் சிறந்த பங்காக மிளிரும். இதுவே திருச்சபையின் பலமாக வெளிப்படுத்த முடியுமா உங்களால் என்பதே இன்றைய வழிகாட்டலின் வெளிப்பாடாகும்.

பல சவால்கள் மனக்காயங்களாக, பிறர் மீது குற்றப்பழிகளாக இனம் கண்டு விரக்தியுறும் இளமைப் பருவம் தன்னை தானே மீட்டுப் பார்த்தால் பிறரது முரண்களை விட ஒவ்வொரு இளையோரும் தனது குறைநிறைகளை இனம் காண்பதுடன், குறைகளை முதலில் எம்மில் களைந்து எம்மால் முடிந்த நிறைவான செயல்களை நாமே முன்நின்று செயற்பட கிடைத்த சந்தர்ப்பங்களை சாதகமாக்கி சாதனை படைத்த பலரது வாழ்வு எமக்கு படிப்பினையாகவுள்ளது. இளையோரா கிய நாம் ஓர் நற்செயலில் பயணிக்க வாழ்த்துக்கள்.

எந்த விடயங்களையும் பேசி முரண்களை தீர்க்கும் இளையோராக நல்ல தலைவர்களை உருவாக்க முயன்ற உங்கள் முயற்சிகளை அடுத்த மடலில் எதிர்பார்க்கினறேன்.

நன்றி

அன்புடன்
செ.யோசப்பாலா
உளச் சமூகச் சீராளன்

**இயேசுவின் இறப்பு வரை சிலுவை என்பது துன்புறுத்தல், அவமானம் மற்றும் மரணத் தின் சின்னமாக விளங்கியது. இயேசுவின் இறப்பின் பின் சிலுவை நிலைவாழ்வின் சின்ன மாகியது. அருள்தரும் பேரின்பத்தின் சின்னமாகியது. ஒளியின் சின்னமாகியது. நல்லிணக்கத் தின் சின்னமாகியது. இவ்வுலகில் காணப்படும் பலவிதமான பல் கலாசாரங்களுக்கு உட்பட்ட சிலுவைகளைப் பற்றிய மறை அறிவையும், ஆன்மீக அறிவையும், அனுபவத்தையும் மையமாகக் கொண்டு பல்வேறு வகையான சிலுவைகளின் வடிங்களையும் அவற்றிற்கான விளக்கங் களையும் காட்சிப்படுத்தியது மட்டுமன்றி, சிலுவைளின் சரித்திரம் என்னும் நூலிலும் பதிவு செய்துள்ளேன். அருட்பணி சிசில் ஜோய் பெரேரா, அதி-பர், "தஹம் செவன" இடைநிலைக் குருமடம், கலுத்துறை.**



"எமது சீடராக வரவிரும்பும் எவரும் தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்"
- இயேசுக்கிறிஸ்து

### அப்பிள் சிலுவை


இச்சிலுவையானது அப்பிள் சிலுவை என்று குறிப்பிடப்படு கின்றது. வட்டங் களின் கடைசிப் பகுதியானது அப்பிள் பழத்தை ஒத்ததாகக் காணப்படுகின்றது. பிரான்ஸ் மொழியில் அப்பிள் என்பது பொம்மி என்று அழைக்கப் படும். இச்சிலுவை மேலும் பல்வேறு பெயர் களில் அழைக்கப்படுகிறது. உ+ம் பொமிடி மற்றும் பொழி. பொதுவாக அப்பிள் என்பது நல்ல கிறிஸ்தவ வாழ்க்கையின் கனிகளை வெகுமதியாக அடையாளப்படுத்துகின்றது. மேலும் பல சிலுவைகள் பழங்களின் பெயர் களைக் கொண்டதாக இனாங் காணப்பட்டுள் ளன. ஓலிவ் சிலுவை, திராட்சை சிலுவை, மற்றும் ஹசல்றட் சிலுவை, தோடம்பழச் சிலுவை, வாழைப்பழச் சிலுவை இவற்றில் சிலவாகும். மேலும் இது பேசாண்ட் சிலுவை அதாவது பேசாண்ட் என்பது கிரேக்கநாட்டின் அக்காலப்பெயரான பிரான்சிடியம் என்பதிலி ருந்து உருவானது. விவிலியத்தில் அப்பிள் என்பதற்கு ஆழமான பொருள் காணப்படு கிறது. மேலும் வீடு, கூடாரம் போன்றவற் றிற்கு அப்பிள் மரம் நிழ லாகப் பயன்பட்டதுடன் இது ஒரு சுவையான, மணமுடைய மர மாகும். ஒருவருடைய கண் வட்ட வடிவ மாக இருப்பதால் இது அப்பிளுக்கு ஒப் பிடப்படுகிறது. இவ்வாறு பார்வை ஒரு விலைமதிப்புப் பொருளாக விளங்கு கின்றது. விவிலியத்தில் ஏதேன் தோட்டத் தில் அப்பிள் பழம் தான் காணப்பட்டது எனக் குறிப்பிடப்படவில்லை, மாறாக தொடக்க நூலில் தடைசெய்யப்பட்ட பழம் நல்லது, கெட்டதை அறியும் மரத்தில் இருந்தது என்றும் கடவுள் மனிதனை தனது சாய லாகப் படைத்ததால் மனிதன் பரிசுத்த மானவனாக தீமையைப் பற்றி அறியாத வனாகக் காணப்பட்டான். அம்மரத்தின் கனியை உண்ட பின்பு ஆதாம் மற்றும் ஏவாள் தீமை எதுவென உணர்ந்து கொண்டதோடு அந்நேரத்திலிருந்து அவர்கள் வெட்கத்தையும் பயத்தையும் வெளிப்படுத்தினர். அப்பிள் சிலுவை மனிதனுக்கு கடவுள் தந்த சுதந்திரத் தையும் படைப்புக்களில் தலை சிறந்த படைப்பு மனிதன் என்பதை கூறுகின் றது காரணம் மனிதன் கடவுளின் கண் ணாக உணரப்பட்டான்.

# யாழ். அடைக்கல அன்னை பங்குத் திருச்சபையில் அன்னை மரியாளின் பிறப்புப் பெருவிழா

புரட்டாதி திங்கள் 8ம் நாள் யாழ். புனித அடைக்கல அன்னை பங்குத் திருச்சபையில் இயேசுவின் தாய் புனித கன்னி மரியாளின் பிறப்புப் பெருவிழா மிகவும் கருத்தாழ மிக்க முறையில் பல நூற்றுக் கணக்கான இறைமக்கள் சமூகத்தில் பக்தி சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

**வலய ரீதியான ஆயத்தங்கள்**

புனித கன்னிமரியாளின் பிறப்புப் பெருவிழா விற்கு முன்னதாக பங்குத் திருச்சபையில் உள்ள 8 வலயங்களிலும் வாரத்தின் சனிக்கிழமை தோறும் பிற்பகல் 5.00 மணிக்கு வலய சந்திப்புக்கள், ஒன்று கூடல்கள், வலயத் திருப்பலிகள் என சிறப்பான முறையில் இடம்பெற்றது. இதிலுள்ள சிறப்பம்சம் என்னவென்றால் வலய திருப்பலிகளின் பின்னர் இடம்பெற்ற ஒன்றுகூடல்களில் எதுவித வேற்றுப்பிரிவுகளும், ஏற்றத் தாழ்வுகளுமின்றி அங்கு பரிமாறப்பட்ட உணவுப் பண்டங்களையும், பானங்களையும் எல்லோரும் ஒரு அன்பிய சமூகமாக இணைந்து உண்டு மகிழ்ந்தது எல்லோரையும் பெரும் மகிழ்வில் ஆழ்த்தியது. அது மட்டுமல்லாமல் வலயங்களில் சேர்க்கப்பட்ட கணிசமான நிதிப்பங்களிப்பைக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட கற்றல் உபகரணங்களை வறுமைக் கோட்டில் வாழும் மாணவ மாணவிகளின் தேவைக்காக பகிர்ந்தளிக்கும் நோக்குடன் அவற்றை வலய திருப்பலிகளின் போது காணிக்கையாக செலுத்தியது அன்பிய வாழ்க்கை முறையை எல்லோர் மத்தியிலும் உணர்த்தி



நின்றது.

மேலும் அன்பிய கூட்டங்கள் என்று பெரிதாக கூறிக்கொள்ளாத பங்குச் சமூகம் அன்பிய வாழ்விற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாக திகழ்ந்தது பலரது பாராட்டையும் பெற்றது மட்டுமல்ல ஏனைய பங்குகளுக்கும் நல்லதொரு எடுத்துக் காட்டாய் திகழ்ந்தது.

**கொடியேற்றம்**

ஆலயம், ஆலய சுற்றுவட்டம் யாவும் வலய அங்கத்தவர்களால் நன்கு உள்ளும் புறமும் சுத்தம் செய்யப்பட்டு, பங்கிலுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பங்களும் குட்டித் திருச்சபைகளாகி, குட்டித் திருச்சபைகள் சிறு சிறு வலய திருச்சபைகளாகி, வலய திருச்சபைகள் யாவும் ஆவணி திங்கள் 30ஆம் நாள் மாலை 5.00 மணிக்கு ஆலய முன்றலில் வலய கொடிகளுடன் ஒன்றுகூடினர். பின்னர் இடம்பெற்ற செபமாலைத் தியானத்தைத் தொடர்ந்து நாம் எல்லோரும் யாழ். புனித அடைக்கல அன்னை பங்கு கிறிஸ்தவ சமூகம் என்ற முறையில் பங்குத் தந்தை J.B. அன்ரனி அடிகளார் தலைமையில் பல அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், இறைமக்கள் முன்பாக கூடினர். அங்கு முதலில் வலய கொடிகள் யாவும் பங்குத் தந்தையால் மந்திரிக்கப்பட்டு வலய தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்நேரம் தூய ஆவியின் துணை வேண்டி இறைமக்களால் பாடல் இசைக்க வலய தலைவர்களால் வலயக் கொடிகள் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு கம்பீரமாய் உயர்ந்து நின்ற பிரதான கொடிக்கம்பத்தில் "நாம் பலராயினும் கிறிஸ்துவில் ஒரே குடும்பமாக, பங்குத் திருச்சபையாகப் பயணிக்கின்றோம்" என்பதன் அடையாளமாக பிரதான கொடிக்கம்பத்தின் நடுவே சுற்று வட்டப் பாதையில் இணைக்கப்பட்டது.

தொடர்ந்து புனித அடைக்கல அன்னையின் திருவுருவம் பொறிக்கப்பட்ட பங்கின் பிரதான கொடி மந்திரிக்கப்பட்டு பங்குத் தந்தையால் ஆலய பிரதான நுழை வாயிலில் இருந்து பிரதான கொடிக்கம்பத்தின் உச்சிக்கு ஏற்றப்பட்டது. ஆலய முன்வாயிலிலிருந்து ஏற்றப்பட்ட கொடியானது காற்றலையில் கலந்து அசைந்தாடி கம்பத்தின் உச்சிக்கு மெதுவாக நகர்ந்து சென்ற காட்சி எல்லோர் உள்ளங்களிலும் ஆனந்தக் கண்ணீரை வரவழைத்தது. அந்நேரம் அடைக்கலத் தாயின்



பாரம்பரிய கீதம் எல்லோராலும் உணர்வு பூர்வமாக பாடப்பட்டது. "கொடியானது வானுயர ஏற்றப்பட்டது போல இந்நவநாட் காலங்களில் பங்குத் திருச்சபையினரின் உள்ளங்களும் உயர்வான சிந்தனைகளுடன் மனமாற்றம் நோக்கி உயிர்த்தப்பட வேண்டும்" என பங்குத் தந்தையால் அழைப்பு விடப்பட்டது.

**ஆயத்த திரு வழிபாடுகள்**

கொடியேற்றங்களைத் தொடர்ந்து இறை மக்கள் ஆலயம் நுழைய, முதல்நாள் திருவழிபாடுகள் இனிதே ஆரம்பமாகியது. அருட்பணியாளர்கள் S.ஞானராஜா, A.F.பெனற், ஞனேந்திரன் அடிகளார் தமிழ் மணம் கமழ மலர் மாலை அணிவிக்கப்பட்டு, சந்தனத் திலகம் இடப்பட்டு, ஆராத்தி எடுக்கப்பட்டு புனித அந்தோனியார் வலயத்தினரால் திருப்பீடம் நோக்கி அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து திரு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது. முதல் இரண்டு நாட்களும் அருட்பணி ஞானேந்திரன் அடிகளாரும், தொடர்ந்து இரண்டு நாட்கள் அருட்பணி செல்வரட்ணம் அடிகளாரும், மறுநாள் அருட்பணி ஜெகன் அ.ம.தி. அடிகளாரும் திரு வழிபாடுகளின் போது மறையுரைகள்



ஆற்றினார்கள். திரு வழிபாடுகள் முறையே புனித அந்தோனியார், புனித சூசையப்பர், புனித அன்னம்மாள், புனித மரியகொறற்றி, புனித செபஸ்தியார் வலய மக்களால் முன்னெடுக்கப்பட்டன. இன்றைய கிறிஸ்தவ குடும்ப வாழ்வுக்குத் தேவையான தலைப்புக்களில் மறையுரைகள் இடம்பெற்றது அங்கே சிறப்பம்சமாக எண்ணப்பட்டது.

தொடர்ந்து வந்த ஐந்து நாட்களிலும் மறையுரைஞர் அருட்பணி ஜீவா போல் அ.ம.தி. அடிகளாரின் நெறிப்படுத்தலில் முறையே புனித அன்னைத் திரேசாள், புனித யோசேவ் வாஸ், புனித இயூஜின் டி மசனற் வலயத்தினர் திருவழிபாட்டுகளை சிறப்பிக்க அருட்பணி ஜீவாப் போல் அடிகளாரின் கருத்தாழம் மிக்கதும் அழகிய தமிழ் சொற்பதங்கள் கொண்டதுமான மறையுரைகளும், திருவழிபாடுகளும் இடம்பெற்றன.

**இறுதி இரண்டு நாட்களுள்**

ஆயத்த நாட்களின் 7 ஆம் நாள் மாலை ஆலய முன்றலில் பங்கின் நற்கருணை திருவிழா இடம்பெற்றது. அன்றைய திருவழிபாடுகளை மறை ஆசிரியர்கள் முன்நின்று நடாத்தினார்கள். அவர்களுடன் பங்கின் இளைஞர்களும் இளம் தந்தைமாரும் இணைந்து செயற்பட்டார்கள். நற்கருணை திருவிழாத் திருப்பலியை அருட்பணி மங்களராஜா தலைமை ஏற்று ஒப்புக்கொடுத்தார். திருவழிபாட்டின் இறுதியில் நற்கருணை ஆண்டவர் மக்கள் மத்தியில் மிகவும் பக்தியுடன் பவணியாக எடுத்து வரப்பட்டு ஆசீரும் வழங்கப்பட்டது. தொடர்ந்து மறுநாள் காலை மரியன்னையின் பிறப்பு பெருவிழாவின் முதல் திருப்பலி காலை 5.00 மணிக்கு முன்னாள் பங்குத் தந்தையர்களான அருட்பணி J. நீக்கிலஸ், அருட்பணி பிலேந்திரன் மற்றும் பங்கின் மைந்தன் அருட்பணி இரவிச்சந்திரன் அடிகளாரும் இணைந்து ஒப்புக் கொடுத்தனர்.

தொடர்ந்து காலை 6.30 மணிக்கு அன்னையின் பிறந்தநாள் பெருவிழாத் திருப்பலி மண்ணின் மைந்தன் அருட்பணி பிறக்றிக் தேவராஜா அ.ம.தி அடிகள் தலைமையில் பத்திற்கும் மேற்பட்ட அருட்பணியாளர்கள் இணைந்து ஒப்புக்கொடுத்தார்கள். இவ் இரண்டு நாட்களிலும் அருட்பணி ஜீவா போல் அடிகளாரின் நெஞ்சைத் தொடும் இறை வார்த்தைப் பகிர்வு இடம்பெற்றது. மேலும் இப்பங்கில் 01.09.2018ல் இடம்பெற்ற முதல்நன்மை திருப்பலி மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி P.J. ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் அருட்பணி எரிக் றொசான் அடிகளாரும் இணைந்து ஒப்புக்கொடுத்தார்கள். மேலும் முறையே அருட்பணியாளர்களான பெனற், யாவிஸ், மவுலிஸ், யஸ்ரின், ஸ்ரீபன், றஞ்சித்குமார், மங்களராஜா, சதீஸ்குமார், றெஜி இராஜேஸ்வரன், மத்தியூஸ், அஞ்சலோ, போல் அனக்கிளிக்ற் ஆகியோருடன் அமலமரித் தியாகிகளான குரூஸ், கொன்பியூசியஸ், சுதர்சன் ஆகியோரும் இணைந்து திருவிழா திருப்பலியையும், ஏனைய ஆயத்த நாட்களின் திருப்பலிகளையும் ஒப்புக்கொடுத்தது எல்லோரின் மகிழ்வையும் இரட்டிப்பாக்கியது.

**தேர் பவனி**

மேலும் அன்று மாலை இடம்பெற்ற அன்னையின் தேர் பவனியானது இவ்வாண்டில் ஓர் சிறப்பான இடத்தைப் பிடித்துக் கொண்டது. O.L.R. பங்குத் திருச்சபையின் வரலாற்றில் புனித அடைக்கல அன்னைக்கென ஓர் அழகிய கண்ணாடிக் குவளையால் ஆன 17 அடி உயரம் கொண்ட புதிய தேர் எமது பங்கு மகன் திருவாளர் இம்மானுவேல் லூயிஸ் சுபேந்திரன் குடும்பத்தினரால் பெருந் தொகை நிதியில் செய்யப்பட்டு அன்னைக்கு பிறந்தநாள் பரிசாக வழங்கப்பட்டது. அழகிய தேரில் அலங்கரிக்கப்பட்ட வீதிகளால் வலம் வந்து பங்கு மக்களுக்கு இறை ஆசீர் பெற்றுத் தந்த அன்னையின் தேர்ப் பவனியைத் தொடர்ந்து ஆலய மேடையில் திருவாளர் சுபேந்திரன் அவர்கள் பங்கு மக்களால் நன்றியோடு கௌரவிக்கப்பட்டார். "அன்று முல்லைக்கு தேர் கொடுத்தான் பாரி, இன்று அன்னைக்குத் தேர் கொடுத்தான் சுபேந்திரன்" என பங்கு மே.ப.பேரவை செயலர் திரு அ.மரியதாசன் ஆசிரியரால் புகழாரம் சூட்டப்பட்டு, மண்ணின் மைந்தன் அருட்பணி M.A.P.R. சௌந்தரநாயகம் அடிகளாரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்து வலயக் கொடிகள் யாவும் எவ்வாறு ஏற்றப்பட்டதோ அதேமுறையில் திரும்பவும் இறக்கப்பட்டு இறுதியாக பங்குத் தந்தை அவர்களால் பங்கு கொடியானது ஆலய மேடையில் நின்று அன்னையின் புகழ்பாட இறக்கப்பட்டது. நிறைவாக அருட்பணி ஜீவா போல் அ.ம.தி அடிகளாரின் இறுதி செபத்தைத் தொடர்ந்து பங்குத் தந்தையால் புனித அடைக்கல அன்னையின் திருச்சுரூப ஆசீர் வழங்கப்பட்டது. இவ் இறுதி நிகழ்வுகளில் யாழ். மறைக் கோட்ட குருமுதல்வர் அருட்பணி R.C.X நேசராஜா அடிகளாரும் கலந்து கொண்டு எமக்காக செபித்துநின்றார். ஈற்றில் பங்கு மகன் ஒருவரால் குழந்தைகள், இளையோர், பெரியோர், முதியோர் என எல்லோரையும் மகிழ்விக்கும் வான வேடிக்கை சிறிது நேரம் இடம்பெற்று விழா இனிதே நிறைவு பெற்றது. இந்நாட்களில் பங்கு மக்களும், பங்கை சாராதோரும் தாராளமாய் செய்த நிதி பங்களிப்பையும், பொருட்களாகவும், உணவு வகைகளாகவும் தந்துதவிய மனோகரி, கிறிஸ்ரி விக்ரர், மகேந்திரன் குடும்பத்திரையும், எமது பங்குத் திருச்சபைக்கு தேவையான பிளாஸ்ரிக் தளபாடங்களை அரச நிதியில் இருந்து பெற்றுக்கொள்ள வழிசமைத்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ விந்தன் கனகரட்ணம் அவர்களையும், அவை எம்மிடம் வந்துசேர உதவிய யாழ். பிரதேச சபை ஊழியர்களையும் நன்றியுடன் நினைவு கூர்ந்து அவர்களுக்காக இறை ஆசீர் வேண்டி நிற்கின்றோம்.

செல்வி மெறிற்ரா டிலக்ஷி மகேந்திரன்
மறையாசிரியர் – O.L.R

## வெள்ளி விழா வாழ்த்து

**இல்லறவாழ்வில் வெள்ளி விழா காணும் இனிய தம்பதியினரே:
அன்புடன் உங்களை வாழ்த்துகின்றோம்.**




திரு. திருமதி
உதயகுமார் திரேசாமலர்

**25.09.1993 - 25.09.2018**

இருமனம் கலந்த திருமணவாழ்வில்
இருபத்து ஐந்து ஆண்டுகளை
இனிதே நிறைவு செய்து
இன்புற்று மகிழும் இவ்வேளையில்
இன்று போல் என்றும் இன்புடன்
இறைவனின் ஆசீருடன் இகமதில் வாழ்ந்திட
இன்முகத்துடன் வாழ்த்தி நிற்கின்றோம்.

புலோப்பளை,
பளை.

வாழ்த்துவோர்
அன்பும் பெற்றோர், மகன்,
உடன்பிறப்புக்கள், மைத்துனர்,
மைத்துனி, மருமக்கள்.

AD78

## விண்ணக வாழ்வின் 2ம் ஆண்டு நினைவு தினம்



அமரர். தங்கராசா பகவத்சிங்கம்
( அங்கிள் )

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| **22 . 11 . 1947** | **24 . 09 . 2016** |

AD76

அப்பா உங்களை நினைக்கும் போது ஆறுதல் சொல்ல
கண்ணீர் மட்டுமே எமக்கு!!!
நீங்களோ எம்மைப் பற்றிய நினைவே இல்லாமல்
உறங்கிக் கொண்டிருக்கிறீர்கள் மண்ணுக்குள்ளே!!!

பண்டார வன்னியன்
கற்சிலை மடு

நினைவு கூறுவோர்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இறைவனின் பிரசன்னத்தில் 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
12 . 06 . 1928

விண்ணில்
02 . 10 . 2017

அமரர்.
தேவசகாயம் மைக்கல் இராசையா
(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியரும்
உப அதிபரும், விரிவுரையாளரும்)

AD79

நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்துவிட்டேன்.விசுவாசத்
தைக் காத்துக்கொண்டேன். இனி எனக்கென
வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்விற்கான வெற்றிவாகையே

இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற இறைவரம்
வேண்டி 2.10.2018 அன்று செவ்வாய்கிழமை காலை
6.30 மணிக்கு சாவகச்சேரி புனித லிகோரியார்
ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இல. 41 வங்களா வீதி.
மீசாலை.

அன்புடன் நினைவு கூரும்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# நெடுந்தீவில் மறைக்கல்வி விழா - 2018

16.09.2018 அன்று ஞாயிறு நெடுந்தீவுப் பங்கிலே மறைக் கல்வி விழாவானது பங்குத் தந்தை அருட்பணி எமில் போல் அடிகளாரின் தலைமையில் காலை 6.30 மணியளவில் புனித பற்றிமா அன்னை ஆலய முன்றலில் புனித யுவானியார் மறைப்பாடசாலை, புனித பற்றிமா மறைப்பாடசாலை, புனித யாகப்பர் மறைப்பாடசாலை, புனித சவேரியார் மறைப் பாடசாலைகளும் ஒன்றிணைந்து திருச்சபைக் கொடியை பங்குத் தந்தை ஏற்ற மறைப்பாடசாலைக் கொடிகளை மறைப்பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களினால் ஏற்றப்பட்டு ஆலயத்தில் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதில் அருட்சகோதரிகள், மறையாசிரியர்கள், மறைக்கல்வி மாணவர்கள், பெற்றோர்கள், இறை மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

அன்று மாலை 4.00 மணியளவில் புனித பற்றிமா அன்னை ஆலய முன்றலில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தலைவர் திருமதி அ.மேரிமக்டலின் அவர்களின் தலைமையில் பிரதம விருந்தினர் திருமதி பா.செல்வராணி (அதிபர் யா. நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் அ.த.க. வித்தியாலயம்) அவர்களும்,பங்குத் தந்தை, அருட்சகோதரிகள் அனைவரும் ஆராத்தி எடுத்து மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றார்களால் அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் மங்கல விளக்கேற்றியதுடன் மறைப்பணியின் முக்கியத்துவம், அதன் சிறப்பு, தற்காலத்தில் மறைக் கல்வியின் அவசியம் என்பன பற்றி பங்குத்தந்தையாலும், பிரதம விருந்தினராலும், அருட்சகோதரிகளாலும் உரையாற்றப்பட்டது.

பின்னர் கலை நிகழ்வுகள் ஆரம்பமானது நடனம், கோலாட்டம், கும்மி, முழவு நடனம், இசையும் அசைவும், நாடகம் போன்ற நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டு மாலை 7.00 மணியளவில் செயலாளரின் நன்றியுரையுடனும் கொடியிறக்கத்துடனும் நன்றிப்பாடலுடனும் மறைக்கல்வி நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

# புத்துணர்ச்சியையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்திய நெடுந்தீவுப் பங்கின் இளையோர் ஒன்றுகூடல்



இவ்வருட இளையோர் ஆண்டை முன்னிட்டு எமது இளையோர் மட்டில் புத்துணர்ச்சியையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையில் எமது நெடுந்தீவுப் பங்கின் இளையோருக்கான ஒன்றுகூடலானது நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்பணி எமில் போல் உதவியுடன் திருக்குடும்ப இளைய சகோதரிகளால் 13.09.2018 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் 60 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டு தங்களது பிரசன்னத்தால் எம்மை மகிழ்வித்து அவர்களும் பெருமகிழ்வடைந்தனர்.

தியானம், பிரபஞ்ச நடை, சிறுவிளையாட்டுக்கள், ஆடல்பாடல்கள், அதைஎவ்வாறு எதிர்கொண்டு முன்நோக்கிச் செல்வது என்று சில கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்றது.

இறுதியாக குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தலைப்புகளுக்கேற்ப பல நிகழ்வுகளை சிறப்பாக செய்தனர்.

## விண்ணக வாழ்வின் 3ம் ஆண்டு நினைவு தினம்



அமரர். சந்தியோகு அடைக்கலமுத்து
(பூபதி பேக்கறி உரிமையாளர்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| **04.09.1941** | **29.09.2015** |

அப்பா என்றொரு ஆலமரம்
அனைவரையும் ஆதரித்தார்
ஆனையூரின் அருந்தவப்புதல்வன்
இன்று உங்கள் அன்பின்றி
நாங்கள் அங்கலாய்க்கின்றோம்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை
077 742 7777

நீங்கா நினைவுகளோடு
சந்தியோகு குடும்பத்தினர்
மகன்: அ.அசன்
மகள் : திருமதி அனுசா சந்திரா
பேரப்பிள்ளைகள்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### உலகெங்கும் சிதறி.....

இருப்பினும் பல சுயநலன்களுக்காகவும், கவர்ச்சிகரமான தவறான போதனைகளுக்கு அடிமைகளாகியும் தமது விசுவாச வாழ்வைப் புறந்தள்ளி, குறிப்பாக அன்னை மரியாவை உதாசீனம் செய்து வாழ்வோரும் இருக்கின்றார்கள் என்று கவலை தெரிவித்த குருமுதல்வர் இப்படியானவர்களின் மனமாற்றத்திற்காகச் செபிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

றொரன்றோ மாநிலத்தின் ஆன்மீகப் பணியக இறைமக்களின் நிறைவான பங்களிப்போடு புனித ஆரோக்கிய அன்னையின் திருவிழாத் திருப்பலி சிறப்பாக நடைபெற்று மரியன்னையின் திருச்சுரூபப்பவனி. ஆசீர்வாதத்தோடு இனிதே நிறைவுற்றது.

## யாழ் மறைமாவட்டத்தில் புனித யோசப்வாஸின் அற்புதச்சிலுவை தரித்து வைக்கப்பட்டு ஆராதனை செய்யப்படும் இடங்கள் மற்றும் காலநேரங்கள்

**18.10.2018 -**

பி.ப 1.30 அளம்பில் புனித அந்தோனியார் ஆலயம்
பி.ப 2.00 - 3.00 முல்லைத்தீவு புனித பேதுரு ஆலயம்
பி.ப 4.00 - 5.00 புதுக்குடியிருப்பு குழந்தை இயேசு
பி.ப 6.00 தர்மபுரம்
பி.ப 7.00 கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயம்

**19.10.2018**

மு.ப 7.00 - 8.00 செம்பியன்பற்று புனித யூதாத தேயு ஆலயம்
மு.ப 9.30 - 10.30 மணற்காடு மடு அன்னை திருத்தலம்
மு.ப 11.30 - பி.ப 1.00 பருத்தித்துறை புனித தோமையார் ஆலயம்
பி.ப 1.45 - 2.45 புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம்
பி.ப 3.30 - 4.00 கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயம்
பி.ப 5.00 - 6.00 அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயம்
பி.ப 6.45 - 7.45 பலாலி

**20.10.2018**

மு.ப 6.00 - 8.00 சில்லாலை புனித மரியாள் ஆலயம்
மு.ப 8.30 - 10.00 இளவாலை புனித அன்னாள் ஆலயம்
மு.ப 11.00 - 11.30 மல்லாகம்
மு.ப 11.45 - பி.ப 12.45 சுண்ணாகம் புனித அந்தோனியார் ஆலயம்
பி.ப 2.00 - 3.00 உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயம்
பி.ப 4.30 - 6.30 மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயம்
பி.ப 7.30 நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயம்

**21.10.2018**

மு.ப 6.30 - 9.00 யாழ். புனித மரியன்னை பேராலயம்
மு.ப 9.45 - 11.00 பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம்
மு.ப. 11.30 - 12.00 கொழும்புத்துறை இறங்குதுறை
மு.ப 12.45 - பி.ப 2.00 குருநகர் புனித யாகப்பர் ஆலயம்
பி.ப 2.45 - 4.00 மண்டைதீவு புனித பேதுரு ஆலயம்
பி.ப. 5.00 ஊர்காவற்றுறை புனித மரியன்னை ஆலயம்

**22.10.2018**

மு.ப 6.30 - 9.00 சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயம்
மு.ப 10.00 - 10.30 பூநகரி
பி.ப 12.00 - 3.00 வலைப்பாடு புனித அன்னாள் ஆலயம்
பி.ப 5.00 முழங்காவில்

**23.10.2018**

மு.ப 9.30 கையளிப்பு - மன்னார் மறைமாவட்டம்

## வரலாறு காணாத மக்கள் தொகை சாட்டி திருத்தலத்தில்

சாட்டி சிந்தாத்திரை மாதா திருத்தல வருடாந்த திருவிழா கடந்த 13.09.2018 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 22.09.2018 அன்று திருவிழாத் திருப்பலியுடன் நிறைவேறியது.

சாட்டி சிந்தாத்திரை மாதா திருத்தல திருவிழாவிற்கு இம்முறை மக்கள் தொகை பெரும் எண்ணிக்கையில் காணப்பட்டது. திருநாள் திருப்பலியை யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். அருட்பணி போல் நட்சத்திரம் (அமதி) அடிகளார் இறுதி ஐந்து நாள் தியானங்களையும், நற்கருணை வழிபாட்டையும் நடாத்தினார்.

ஏனைய நவநாட்களுக்குரிய தியானங்களை அருட்தந்தையர்களான பிரெட்றிக் தேவராஜ் (அமதி), ஜெகன் கூஞ்ஞ (அமதி), ஆகியோர் நடாத்தினார்கள். இவ் விழா பணிகளையும் ஆலய புனர்நிர்மாணப் பணிகளையும் அருட்பணி லொசிங்டன் (அமதி) அடிகளார் திறம்பட ஒழுங்கமைத்தமை குறிப்பிடத்தக்கது.

## புதுக்குடியிருப்பு பங்கின் தேசிய மறைக்கல்வி தின நிகழ்வுகள்

தேசிய மறைக்கல்வி தினமானது 16.09.2018 அன்று புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் மறைக்கல்வி மாணவர்கள் மறையாசிரியர்கள் பங்கு மக்களோடு இணைந்து வெகுசிறப்பாக நிகழ்த்தப்பட்டது.

காலை 6.00 மணிக்கு அருட்பணி யோசப் றொபின்சன் அடிகளாரின் சிறப்பு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து மறைக்கல்வி மாணவர்களுக்கான ஒளித்தொகுப்பு (குறும்படங்கள்) காணொளி விளையாட்டு நிகழ்வுகள் மூலமும் நல்ல சிந்தனைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்விற்கு ஏறத்தாழ 250 மறைக்கல்வி மாணவர்கள் கலந்து கொண்டு இவ் மறைக்கல்வி தின நிகழ்வை சிறப்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பிள்ளைகளுக்கு காலைச் சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

## பருத்துறை புனித தோமையார் ஆலயத்தில் இளையோர் தினநிகழ்வு



பருத்துறை புனித தோமை யார் ஆலயத்தில் 23.9.2018 ஞாயிற்றுக் கிழமை இன்று இளையோர் தின நிகழ்வும் மறைக் கல்விவார ஆரம்ப நிகழ்வும் சிறப்பான முறையில் நடைபெற்றன.

இந் நிகழ்வுகளின் ஆரம்பத்தில் பங்கு இளையோர் ஒன்றிய கொடியும் மறைக் கல்வி மாணவர்களின் கொடியும், முறையே யாழ்ப்பாண மறை மாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு அன்ரன் ஸ்ரிபன் , பருத்துறை பங்குத்தந்தை அருட்திரு யாவிஸ் ஆகியோரால் ஏற்றி வைக்கப்பட்டன.

தொடர்ந்த இளையோருக்கான சிறப்புத் திருப்பலியும் ஒன்றுகூடலும் நடைபெற்றன. இந்நிகழ்வுகள் பருத்துறை பங்குத் தந்தையினால் சிறப்பான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

## கிளிநொச்சி பல்கலைக்கழகத்தில் ஆன்மீக நிலையம்



கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் கிறிஸ்தவ மாணவர்களுக்கு வழிபாட்டுத்தலம் அமைப்பதற்கான காணி ஆசீர்வதிக்கப்பட்டு திருச்சிலுவை நாட்டப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாருடன் கிளி நொச்சி மருத்துவபீடாதி பதியும், பல்கலைக் கழக ஆன்மீக இயக்குநரும் கிளிநொச்சி மறைக் கோட்ட முதல்வரும் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து சிறப்பித்தார்

## முழங்காவில் மரியாயின் சேனை கியூறியா



முழங்காவில் மரியாயின் சேனை கியூறியா கூட்டம் இம்மாதம் 08ம் திகதி பங்கு ஆலயத்தில் இடம்பெற்றது. மரியாயின் சேனை அலுவலர் நீங்கள் உங்களை வலுப்படுத்தும் மையமாக மாதாந்தம் நடைபெறும் கியூறியாக் கூட்டம் அமைகிறது என பங்குத்தந்தை அருட்பணி அருட்செல்வம் அடிகளார் கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய கொமிற்சியத் தலைவர் திரு.ம.கருணைநாயகம் அலுவலர்கள் தங்கள் பதிவேடுகளை பேணிப் பாதுகாக்க வேண்டுமென்று ஆலோசனை கூறினார். இந்நிகழ்வில் கொமிற்சிய ஆன்மீக இயக்குநர் அலுவலர்கள் மற்றும் பலர் பங்கேற்றனர்.

## பருத்தித்துறை மறைக்கோட்ட இளையோர் ஒன்றுகூடல்

பருத்தித்துறை மறைக்கோட்ட இளையோருக்கான ஒன்றுகூடல் நிகழ்வு 23.9.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வெற்றிலைக்கோணி புனித அந்தோனியர் ஆலய வளகத்தில் பருத்துறை மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய காப்பாளர் அருட்திரு மைக் டெனால்ட் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண மறை மாவட்ட இளையோர் ஆணைக்கு இயக்குநர் அருட்பணி அன்ரன் ஸ்ரீபன் பங்கு பற்றி கருத்துரை வழங்கியதோடு, அவருடன் இணைந்து திரு. கரன்சன் ஜெகன் அவர்கள் இளையோருக்கான விளையாட்டு நிகழ்வுகளை மேற்கொண்டு சிறப்பித்தார். நிகழ்வுகளில் 70ற்கும் அதிகமான இளையோர் பங்கு பற்றி பயனடைந்தனர்.


## விவிலிய நாட்காட்டி 2019 விற்பனைக்கு

2019 ஆம் ஆண்டிற்கான கிளறேசியன், இந்திய புனித போல் பதிப்பக வெளியீடுகளான விவிலிய நாட்காட்டிகள் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்குண்டு. மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.


## முல்லைத்தீவு மரியாயின் சேனை கியூறியா

முல்லைத்தீவு மரியாயின் சேனை கியூறியா கூட்டம் கடந்த 24.09.2018 செல்வபுரத்தில் இடம் பெற்றது. மறைக்கோட்ட பொறுப்பாளர் அருட்பணி நிக் சன் கொலின் ஸ் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், மரியாயின்சேனையினர் வெறும் தனிமனிதர்கள் அல்ல. மாறாக அன்னை மரியாவின் போர்வீரர்கள். எனவே படையணியைப்போல் வீரத்துடன், ஆர்வத்துடன் பணி வாழ்வில் ஈடுபட வேண்டுமெனக் கூறினார். மரியாயின் சேனை கொமிற்சியா அலுவலர்கள் ஆன்மீக இயக்குநர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தத்தம் அலுவலர் கடமைகளை விரிவாக விளக்கி நிறைவாக அவற்றைச் செய்யவேண்டுமெனக்கேட்டுக்கொண்டனர்மறை மாவட்ட ஆன்மீக இயக்குநர் அருட்பணிறெஜிஸ் இராஜேஸ்வரன் அடிகளாரும் தனது கருத்துரையில் ஆர்வத்தோடு அர்ப் பணத்தோடு சேனையினர் பணியாற்றவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இப் பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360. பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.